V4 NO 22 4 Jun 1931

JL
0021, N28 KW
N31·4·22
188920

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஜூன் ீ 4உ [No 22.

30 JUN

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 421
2. அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 423
3. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 99—113) K. இராமரத்நம் ஐயர் B.A. 425
4. மானதசாத்திரம் (புலன்கள் - காலவுணர்வு) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. 428
5. நவராத்திரி — ஓர் நாடகம் K. N. சுந்தரேசன் B. A. (Hons) 430
6. கம்பராமாயணம் (சுக்ரீவ படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 434
7. வர்த்தமானம். 439

கலாநிலயம்

188920

மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 3.

பிறர்வயின் பெறற்குரியஉரிமை இன்மையே உண்மையெனின் உறுபொருள் வேறு உரைத்தல் வேண்டுமோ. அதுவுமன்றி 'உரிமை' என்ற சொல் ஒன்றை உணர்த்துவதாயின், தமிழ்த் தெய்வக் கருத்தின்படி அது கடமையையே உணர்த்துமென்றும் சென்றவாரம் செப்பலாயினேம். அதன்படி அவரவர் கடமையைச் செலுத்துகின்ற உரிமையல்லால் வேறோர் உரிமையில்லை என்பது வற்புறுத்தப் பெறுகின்றது. அதனை யாம் வரைந்தபின்னர், ஸ்ரீமான் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல். பிரசுரஞ் செய்துள அடக்கவிலைப் பதிப்புத் 'திருவருட்பா' வின் இரண்டாவது பகுதியாகிய வசனப்பகுதி யொன்று எம் கைக்கு எட்டியது. அதனை ஓதிவருங்கால், மநு முறைகண்ட வாசகத்தில், வேந்தன் தன் மந்திரி கலாவல்லபனை அழைத்துத் தன் மைந்தனைத் தேர்க்காலில் துவைத்துக் கொல்லும்படி ஏவுதலும், நெஞ்சங் குலைந்து நடுநடுங்கிய அம்மந்திரி இக்கட்டளையைப் புரிவதோ மறுப்பதோ வெனத் திகைத்துப் பிறகு, "வேந்தன் விஷம் உண்ணென்று கட்டளையிடினும் உண்ணவேண்டிய உரிமை நமக்கிருக்கிறபடியால்" இக்கருமத்தைச் செய்வதென நினைத்துச் சென்றனன், என்ன இராமலிங்க சுவாமிகள் வரைந்திருக்கும் வாசகத்தைக் கண்ணுற்றோம். இதனோடு நிற்கவில்லை. அந்நூலில் அடங்கிய "ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் பாகத்தைப் படித்தோம். அங்கு,

> "ஜீவகாருண்ய முண்டாவதற்கு உரிமை எது வென்னில்—சீவர்களெல்லாம்ஒருதன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமையுள்ள சகோதரர்களேயாவர். சகோதரர்களுள் ஒருவர் ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவார் என்றறிந்தபோதும், அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு சீவன் துக்கத்தை அநுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படு மென்றறிந்த போதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்க முண்டாவது பழைய ஆன்ம உரிமை என்று அறிய வேண்டும்"

என்று நம் திரு அருட்பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளியுள வாசகங்கள் பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்கன. நற்றமிழின் துறைதோய்ந்து எய்திய அறிவின் விளக்கமுடைய பெரியோர், உரிமையைக் கடமை என்று கொள்வதன்றி வேறு முறை காண்டலரிது என்ன யாம் ஊகித்துரைத்ததற்குச் சான்றாக இராமலிங்கசுவாமிகளது வாக்கியத்தைக் கண்ணுற நேர்ந்ததுபற்றி அகம் மிக மகிழ்கின்றோம். தந்தை வைத்திறந்த சொத்தில் பாகங்கேட்டு வழக்காடும் உரிமையன்றி வேறெவ்வுரிமையும் எண்ணுதற்கு மறியா இக்காலத்தில் இராமலிங்கசுவாமிகள் திருவாக்குச் செல்லும்படி கருணையங் கடவுள் திருவருள் புரிவாராக. ஒருதாய் வயிற்றுச் சகோதரர்க்கு இயன்றது, ஒரு கடவுளின் சிருஷ்டியில் அடங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஒக்கும். அதனைக் காட்டினார் திரு அருட்பிரகாச வள்ளலார். இன்று வேறோர் இதழில், "மன்னே யாவான் வருமப் பாதன் தனை

யும் மகனென்றன்னேன் முனிவா அவனும் ஆகான் உரிமைக்கு" என்று வரும் பாசுரத்திலும், 'உரிமை' என்பதைக் 'கடன்' என்ற பொருளிலேயே கம்பரும் பயின்றிருக்கக் காண்கின்றோம்.

ஆதலின், மெய்யாய கடமை இன்று பொய்யாய உரிமையெனும் உருவம்தாங்கிச் சென்னைச் சித்திர கலாசாலை வாயிற்சேவகன்தன் மண்ணுருவச் சிலையே போல் எங்கெங்கும் சமைந்திருக்கின்றது. போவோர் வருவோர்க்கு இத்தோற்றம் பொய்யெனப் புலப் படுவதில்லை. உண்மைக்கு அயலாய தொன்றை உள தென்று மயங்கிவிடுகின்றனர். இதனால் விளையும் விபரிதங்கள், சிறுகுடில் மடைப்பள்ளிமுதல் மன்னவர் மாளிகைவரையில் பலப்பலவாய்ப் பல்வேறு உருவங்கள் தாங்கி மெய்ம்மையைப் பலவாறு பேதுற்று அலமரச் செய்கின்றன.

திரு அருட்பிரகாச வள்ளலார் பேசிய பழைய ஆன்மஉரிமை அனைத்துயிர்க்கும் மன்னியதாயிருக்க, மாதர் உரிமையென்றும், ஜாதி உரிமையென்றும் ஆள்வோர் உரிமையென்றும், குடிகளின் உரிமையென்றும், பேச்சுரிமை யென்றும், சுயஉரிமை யென்றும், மானுட உரிமையென்றும், பிறப்புரிமை யென்றும், இயற்கை உரிமையென்றும்,பற்பலவாறு பேதைமையால் முழக்கியும் மானுடவாழ்க்கையின் அமைதியை உழக்கியும் திரிவதால் நாம் அத்திருவருட்கு அடியோடு அயலாவதன்றி, அடையும் பயன் வேறிலது. மாதர்உரிமை என்றோர் கொடி இன்றுஉயர்த்தப் பட்டிருக்கின்றது. அது இயற்கையமைப்பு, சமசுதந்திரம் முதலிய கருத்துக்களால் நெய்யப்பட்டிருக்கின்றதேனும், அக்கொடியை அலைத்துவைக்கின்ற காற்றோ, 'அப்பன் சொத்தில் சமபாகம்,' 'புருடன் போனால் வேறொருவன்' என்றென்று ஏங்கும் நெட்டுயிர்ப்புக்களே. பொருட்பேறும் மணவினையும் கடமைகளே என்ற மெய்ம்மை தெரிந்திருந்தால் மாந்தர் உரிமையென்று இவைகளுக்காக இத்தனை அலையமாட்டார். தகப்பன் சொத்திலே உரிமையுண்டென்று கேட்கும் புத்திரர்கள் இகழ்தற்குரியவர். இல்லையென்று இரப்போருக்கு இல்லையென்னாது ஈயும் கடமைக்கே கையாளாய் இருக்கின்றது இப்பொருள் என்னும் உண்மை உணரப்பெற்று, அருட் பிரகாச வள்ளலார் விளக்கியருளிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் உலகத்தோர் ஈடுபடுவாராயின் அக்கடமையைச் செய்யும் கை தமதாகத்தான் இருத்தல்வேண்டுமெனச் சட்டசபையிலும், வழக்கு மன்றத்திலும், ஒருவரும் முறையிட்டுக்கொள்ளமாட்டார். சொத்தினின்று சில சுகங்கள் தான் துய்ப்பதற்கு உரிமையுண்டென்று உழல்வதாற்றான், இந்தப் பொய்ப்பேச்செல்லாம் புகல்வதற்கு இடம் ஏற்படுகின்றது.

உண்பன நாழி உடுப்பன விரண்டே
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புன பலவே.

என்று மதுரைக் கணக்காயனர் மகனார் நக்கீரர் பாடிய சொற்கள் இந் நற்றமிழ்நாட்டில் நடமாடுமெனில் உரிமையென்று சிலர் உதவாத மொழிகளைத் தூண்டுவாரோ. துய்ப்போம் என்ற தோற்றத்தால் தப்பின இந்நாள் எத்தனையெத்தனை யென்று எண்ணிச் சொல்லவே இயலாமற் போய்விட்டன. ஏவ்வேது துறையிலும் இத்துய்க்கின்ற [illegible] அலைந்து திரிவதால் துன்பங்களே, ஒன்றன்பின் ஒன்றாக நாளுக்குநாள் தொடர்ந்தடர்ந்து நமது வாழ்க்கையை எல்லாம் வெறியாட்டி வைக்கின்றன அல்லவோ. உரிமையை நாடுவதினாற்றான் இந்தத் துன்பங்கள் நேரிடுகின்றனவென்று உரைத்தாலும் அதனை உணர வல்லார் ஆயிரத்தில் ஒருவரென்றாலும் அது அதிகமே. உரிமையை எய்தாததாற்றான் துன்பம் அதிகமாகின்றது என்று எண்ணி, சேற்றிலே சென்றவன் ஒருகாலை வாங்க மற்றொருகாலை அதிகமாக ஊன்றி ஆழவாழ அழுந்துவதுபோல் மேன்மேலும் துன்பத்தில் உலகம் ஆழ்கின்ற. பொல்லாப்புன் மதிக்கு "உண்மையாய கடமையே உன் உரிமை" என்னக்காட்டி அக்கடமையின் உருவத்தை எதிர்நிறுத்தினாலோ, மக்கள் அதன் விலாப்புறத்தைப் போய்க் கிண்டிவிடுகின்றனர். மெய்ம்மையே இஃதென்னென அலமந்து நிற்கின்றது. இப்படி மெய்ம்மையை அலமரச் செய்கின்ற பாவம் சும்மா போகுமோ! மெய் சிதைத்தார்க்கு விளையும் பழியெல்லாம் இக்காலம் நமது வாழ்க்கையை வந்து சூழ்ந்துகொள்ளவே, அதற்குரிய கழிவாய்கள் தேடாமல் துன்பத்தைப் போக்குவதற்கென்று முயல்கின்ற முயற்சியில் சிலந்தி வலைப்பட்ட ஈயைப்போல், அப்பழியிலேயே இறங்கி இறங்கிப் பிணிப்புண்டு மாய்கின்றார் மாந்தர்.

இனி இதற்கு நேர் எதிராயது மற்றொன்று. இல்லாத உரிமையை இருப்பதுபோல் பாவித்து விவகரிக்கும் இப்பொய்ம்மைக்கு ஈடுசெய்ய முயல்பவரென்ன மாந்தர்தமக்குச் சுயமாக இருக்கின்ற பெருமையை இல்லாததுபோன்றே எத்திறத்திலும் நடமாடிவருகின்றனர். உரிமையை மேற்கொள்வதோடு பெருமையைக் கைவிடும் இது வாழ்க்கையின் இருபுறத்திலும் இழுக்குடையதாகின்றது. ஆங்கிலப்புலவர், சார்லஸ் லாம்ப் (Charles Lamb) என்பவர் 'இந்தியா ஆபீஸில்' கிளார்க்காக இருந்தபோது, நாள்தோறும்காலம் கழித்தே 'ஆபீஸிற்கு' வரும் வழக்கமுடைய அவரை, அவரது மேல்அதிகாரி கண்டிக்க நினைத்து, "ஐயா, பத்துமணிக்கு வரவேண்டிய நீ தினந்தோறும் பதினோரு மணிக்குப் பின்னிட்டு வருகின்றாயே, இதற்கு என்ன உத்தரம் சொல்கிறாய்" என்று வினவ, சார்லஸ் லாம்ப், மெல்ல மெல்லத் தலைகுனிந்து, "நான்தான் ஐந்துமணிக்குப் போகவேண்டியவன்,நான்குமணிக்கே நாள்தோறும் முன்னதாகப் போய்விடுகின்றேனே. அதற்கிதனை ஈடுசெய்துகொண்டா லாகாதோ" என்று மறுமொழி தந்தனன் எனக்கூறுவதுண்டு. இருபுறத்திலும்ஆபீஸிற்கு நஷ்டம் இவ்வணமே, மக்களைநோக்கியின்று, "நீங்களேன் இல்லாத உரிமையைக் கைக்கொண்டு வாழ்க்கையை உழக்கித்திரிகின்றீர்" எனக் கேட்டால் அவர், 'நாங்கள்தான் இருக்கின்ற பெருமையைக் கைவிட்டு, அவ்விழவு கொண்டாடத்தெரியாமல் உழல்கின்றோமே—ஆதலின், ஒன்றிற்கொன்று முறைசெய்யப்பட்டது" என்று பதில் சொல்லாதது, மொழிவன்மை இல்லாக் குறையே என்றெண்ணல்வேண்டும். ஏனெனில் இக்கால மாநடச் செய்கை ஒவ்வொன்றும் இந்தப் பதிலையே எடுத்துக் காட்டுகின்றது. மேல்பார்வைக்கு ஏற்ற சமாதானம் போல் தோன்றிய சார்லஸ் லாம்பின் உத்தரம், உற்று நோக்கினால் எப்படி மெய்ம்மையை அலமரச்செய்யுமோ அப்படியே, பெருமையை விற்று உரிமையை வாங்கு மிவ்வாழ்க்கைப் பாழான நஷ்டமே ஆவது [illegible] மெய்ம்மையோ அலமந்து ஓலமிடாது என் [illegible]

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

24. யோகம்

[404-வது பக்கத் தொடர்ச்சி]

9 ஹடயோகம்.

இனி ஹடயோகத்தில் கிரியைகள் யாவையென ஆராய்வோம். அவையாவன:—

(i) தேகசுத்தி - இதைத் தசநாடி சுத்தி யென்பார். நாடிகள் சரிவர நிற்பின் தேகம் தத்துவதோஷமின்றியிருக்கு மென்பது திண்ணம். தேகத்தை ஆக்கவும் அழிக்கவும் எல்லாம் வல்லதான குண்டலியொன்று உண்டென்று ஆன்றோர் கூறுவார். அது யாதென மேல்நாட்டுத் தேகதத்துவ சாஸ்திரமுறையின்படி ஆராய்வோமானால், அது நமது கபாலத்திலுள்ள பெரிய மூளையும், அத்துடன் ஒட்டிய கழுத்தின் மேல்கபாலத்தின் அடிவாரத்தில் நிற்கும் சிறுமூளையும், அவ்விரண்டின் வழியே கீழே பாய்ந்து முதுகெலும்பினுள்ளே நிறைந்து பிட்டம் வரையிற் றொங்கும் முதுகுமூளையும் ஆகும். இதனைத் தனியே பின்னமின்றி வேறே யெடுத்துக் காட்டுவோமாயின் அது இருதலைப்பாம்புபோல் காணப்படும். அதன் கழுத்தில் (சிறுமூளை) மாணிக்கமும் காணப்படும். இப்பாம்புருவத்தைக் குண்டலி யென்பர். பரமசிவன் திருவுருவத்திலும் பாம்பு மூடக் காட்டியிருப்பதும் இக்கருத்தே போலும் ?

சலவ ராபொரு பாம்பொடு தண்மதிக்
கலவ ராவதின் காரண மென்கொலோ
திலத நீள்முடி யார்செம்பொன் பள்ளியார்
குலவி லாலெயில் மூன்றெய்த கூத்தரே .
திருச்செம்பொன்பள்ளி - திருக்குறுந்தொகை. 6.

இக்குண்டலியானது தனது ஆட்சியைத் தேகமெங்கும் பரப்புதற்காகவே வெள்ளைநரம்புகளைக் கிளைகிளைகளாய் ஆங்காங்குப் பிரியச்செய்து உடம்புமுற்றும் ஒவ்வொரு மயிர்க்கால்தோறும் வழியச்செய்யும். இதனால் தேகத்தில் எந்தப் பாகம் நோயுற்றாலும் குண்டலியின் ஆட்சியால் அது தீரும். ஆனாலும்,மேல்பாகமாகிய மூளை, கைகால்களை அசைப்பதற்கும், ஆட்டுவதற்கும் நாம் நடப்பதற்கும் பயன்படுவதுடன் மனமானது தங்குவதற்கு ஒருவகைப் பீடமுமாகும். அக்குண்டலியின் அடிப்பாகமோ நினைவுக்கு வரவேண்டிய அவசியமின்றி, யந்திரங்கள்போல், காலத்தாலும் பொருள் அமைப்பாலும் தானே இயங்கக்கூடிய அவயவங்களின் ஆட்சிபொருந்திய பலபீடங்கள்நிறைந்து அவற்றில் இச்சாசக்தி சம்பந்தமின்றித் திகழும். இவ்விருவகை வினையுள்ள குண்டலியின் பாகங்களைப் பரசிவன் சிரத்திலிருக்கும் கங்கைக்கும் பக்கத்திலுள்ள உமாதேவிக்கும் ஒப்பிடலாம்.

பணங்கொ ளாடர வல்குற் பகீரதி
மணங்கொ ளச்சடை வைத்த மறையவன்
வணங்கு மாமயி லாடு துறையரன்
அணங்கோர் பால்கொண்ட கோல மழகிதே.
திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை. 9.

கங்கை யைச்சடை வைத்து மலைமகள்
நங்கையை யுடனே வைத்த நாதனார்
திங்கள் சூடித் திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே
திருக்கழிப்பாலை-திருக்குறுந்தொகை. 9.

இவ்வாறு நமது தேகத்திலுள்ள* சிவபெருமானும் பெருஞ் சக்தியானது கருணாநிதியாய், இருவகைச் சக்திகளாய், இச்சாசக்தி ரூபமாய் மூளையில் வதிந்தும், கிரியாசக்தி ரூபமாய் முதுகினில் கபாலத்தின் அடிவாரத்தினின்று தொடக்கமாகி வெளிப்பட்டும் தேகத்தைச் சிவலிங்க மூர்த்தமாய் வைத்துக்கொண்டு சீராக்கி வருகின்றதானாலும் மனிதனானவன் தனது கெட்ட நடத்தைகளால் * இப்பெருங் கோயிலை யௌவன பருவத்தில் பலவாறு அசுத்தஞ் செய்தும், இடித்தும் தன்னையறியாது மும்மலங்களைக் கொட்டியும், † காமக்குரோத லோப மோக மத மாச்சரியமென்னும் பேய்களுக்கு இடங்கொடுத்தும், நாசம் செய்யும் வழியே தேடுகின்றான்.

ஆலு மாமயிற் சாயல்நல் லாரோடுஞ்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணலே கம்பனார்
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே.
திருவேகம்பம் - திருக்குறுந்தொகை. 8.

ஊனுக் குமின்பம் வேண்டியு ழலாதே
வானுக் கும்வழி யாவது நின்மினோ
தானுக் குந்தன் னடியவர் நாவினில்
தேனுக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே.
திருவெண்காடு - திருக்குறுந்தொகை. 3.

உற்ற வர்தம் முறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டங்
கற்கி லல்லதென் கண்துயில் கொள்ளுமே ?
திருஅதிகை வீரட்டம் - திருக்குறுந்தொகை. 3.

கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே.
திருக்கோளிலி - திருக்குறுந்தொகை. 9.

எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்றைக்
கடந்தெளிதினேற வல்லோர்
அத்திறத்தோ ரேபுருடர் அவர்களே
தொழற்குரியர் அவரே சான்றோர் ;
மெய்த்திறத்தோர் சேரிடமாய் விநயநிதி
படைத்தருளால் விளங்கா நிற்குஞ்
சுத்தகுண வெவ்வனமிவ் வுலகிலுள்ள
தேவிசும்பிற் சூழ்காடுண்டோ.
ஞானவாசிஷ்டம்.

* ஊனு லாவி யியங்கி யுலகெலாந்
தானு லாவிய தன்மைய ராயினு
வானு லாவிய பாணிபி றங்கவே
கானி லாடுவர் கச்சியே கம்பரே
திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 3.

† காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரர னேயென் றழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே.
திரு ஆமாத்தூர் - திருக்குறுந்தொகை - 3.

மேற்கண்டவாறு குற்றங்கள்பொருந்திக் குணங்கள் பொருந்ாதவர்க்கு நரம்புகளின் தளர்ச்சி நேரும். அது நேர்ந்தகாலையில் குண்டலியின் ஆட்சி குறையும், நோய்கள் * வரும். ஆகையால் அந்நரம்புத் தளர்ச்சிநேரா திருக்கும்படி இம்மையிலுள்ள இன்பங்களால் மோசம்போக வேண்டாமென்பர் மேலோர்.

பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
யுண்டின் றேயென் றுகவன்மின் ஏழைகாள்
கண்டு கோண்மின்நீர் கானூர் முளையினைப்
புண்ட ரீகப் போதும்பி லொதிங்கியே.

தாயத் தார்தமர் நன்னிதி யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே.

போத்தல் மண்சுவர் போல்லாக் குரம்பையை
மெய்த்த னென்றா வியந்திட லேழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர்திருக் கானூரில்
அத்தன் பாத மடைதல் கருமமே.

கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வ மல்கு திருக்கா னூ ரீசனை
யெல்லி யும்பக லுமிசை வானவர்
சொல்லி டீர்நுந் துயரங்க டீரவே.

நீரும் பாலும் நெருப்பு மருக்கனும்
காரும் மாருதங் கானூர் முளைத்தவன்
சேர்வு மொன்றறி யாது திசைதிசை
யோர்வு மொன்றில ரோடித் திரிவரே.

ஓமத் தோடயன் மாலறி யாவணம்
வீமப் பேரொளி யாய விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் கானூர் முளைத்தவன்
சேமத் தாலிருப் பாவதென் சிந்தையே.

திருக்கானூர்-திருக்குறுந்தொகை. 2, 3, 5, 6, 7, 8, 9.

நரம்புகள் தளர்ச்சியின்றிக் குண்டலியம்மையின் கோயிலானது சுசியுடனிருக்கச் சில தேக சாதனங்கள் இன்றியமையாதன. அவற்றுள் முதலாவது, நல்லதீர்த்தத்தில் தினம் குளிப்பதாகும். சில தீர்த்தங்கள் தேக வினையை அறுப்பதுடன் முத்திக்கு வழிகாட்டும் புத்தியும் தரக்கூடும். இதனாலேயே திவ்ய நதிகளும் குளங்களும் முற்காலத்தில் பேர் பெற்றன:—

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண்டா வென்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.
சம்பந்தர்

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெ
புல்கியும் தாழ்ந்தும்போந் துதவஞ் செய்யும் [ய்திப்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
சொல்லுமா றறிகிலே னெம்பெரு மானைத்
தொடர்ந்தடுங் கடும்பிணித் தொடர்வறுத் தானை.

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொன்மணி வரன்றியு நன்மல ருந்தி
அகழுமா வருங்கரை வளம்படப் பெருகி
யாடுவோர் பாவந்தீர்த் தஞ்சன மலம்பித்
திகழுமா காவிரி துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
இகழுமா றறிகிலே னெம்பெரு மானை
யிழித்தநோ யிம்மையே யொழிக்கவல் லானை.
சுந்தரர்.

இத்தகைய தீர்த்தங்களைத் "தெய்வப்புனல்" என்று திருநாவுக்கரசுநாயனார் கூறுவார். திருவானைக்காவலில் சிவபெருமானே நீர்த்திரளா யிருப்பதாலும், ஒரு திருத்தாண்டகப் பதிகமுற்றும் அத்திருப்பதியில் "செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே" எனச் சிவபெருமானை அப்பர் பாடியிருப்பதாலும், "மூரிமுழங் கொலி நீரானை" அவர் பாடியபதிகங்களின் மேற்கோள் இங்கு அநாவசியமே.

தேகசுத்தியில் முதலாவதாக எடுத்துக்காட்டப்படும் திவ்ய தீர்த்தஸ்நானம் பரிசவுணர்ச்சிதருவதுடன் நமது தோலையும் சுத்திசெய்யும். எனவே அது ஒரு இந்திரிய சுத்திக்குப் பயன்படும் என்றோம். ஏனைய இந்திரியங்களிடமிருந் தொழுகு மலங்களைக் கழுவவும் அக்காலத்திலே பயன்படுமாதலின், திவ்ய தீர்த்தங்களில் குளிப்பதால் பஞ்சேந்திரியங்களுக்கும் வெளிச்சுத்தம் ஏற்படுமென்பது திண்ணம். இனி இரண்டாவதான தேகசுத்தி, நமது அன்ன மய தேகத்தைப் பரிசுத்தமாக்கல் - அதைச் சற்றுஉட்சுத்தமென்று கூறலாம். அது எங்ஙனமென்று காண்போம்.

முன்னரே கண்ட குண்டலிசக்தியின் கருவியான மூளை, நரம்புதாதுக்களின் அழுக்கான கழிவு நீக்கிப் பின்னும் வலிவாய்க் கட்டுப்பாடு ஏற்படுவதற்குத் தேத்கதில் இரத்த மூலமாய் உணவு செல்லவேண்டியதாயிருக்கின்றது. இவ்வுணவே அன்னமய தேகத்தை ஆக்குவதும் அழிப்பதுமாம். பசிக்குணவன்றி, ருசிக்குணவுகொள்வோர், அன்னமயதேகத்தைக் கெடுப்பாராவார். இதற்குஉதாரணம் ஊனைத்தின் றானைப்பெருக்குமாறுமடுத்துண்ணல். இவை தாமசகுணத்தை விருத்திசெய்வதுமன்றி, அவற்றிலுள்ள விஷநீரால் தேகக்கட்டையும் தளர்விக்குமென்பது ஐரோப்பிய வைத்திய சாஸ்திரசித்தாந்த மென்னில் இதற்குத்திருமுறைகளினின்றுமேற்கோள் அவசியமில்லை. யோகிகள் ஒருவேளையுண்பர். காய்களில் உயிரிருப்பதால் அந்தச் சீவனுக்கும் இம்சை நேராதபடி சருகும் நீரும் கொண்டு பசியைத் தணிப்பார். சருகு ஒரு உணவாகுமா மனிதர்க்கென்று தற்கால நாகரிகத்தில் வினா யெழுமாதலால் அதற்கு விடையாய், நமது எருது முதலிய கால்நடைகள் உலர்ந்த வைக்கோலையும் நீரையும் அருந்தியே தேகவலியைப் பெற்று நல்ல பாலையும் கொடுப்பது நமதுபிரத்தியட்சஅநுபவமன்றோ? அதுபோல் தீனிப்பையிலுள்ள அக்கினி யாதொரு பழுதின்றி விளங்கின், சருகும் நீரும் புசித்தமாத்திரத்தில் ஜீரணமாய் நமது அன்னமய தேகத்தை விருத்திசெய்யுமென்பதற்கு ஐயுறவில்லை. ஆயினும் நடலைவாழ்வி லாழ்ந்துள்ள நம்மைப்போன்ற மக்களுக்குச் சருகும் நீரும் உணவாகா. அவ்வுணவு கொள்ளும் யோகிகள் எக்காலத்திலும் பல்லாயிரவருளர். நாம் காணுதிருப்பது நமது தோஷமே:—

---

* இளமை கைவிட் டகறலு மூப்பினூர்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
இளமை யேகிளை யாக நினைப்பனே.
—சித்தத்தொகை-திருக்குறுந்தொகை, 28.

சருகு சலப க்ஷணிக ளொருகோடி யல்லாற்
சகோர பட்சிகள் போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மைய ரனந்த கோடி
இருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத
ஏகாந்த மான மோன
இன்பநிஷ் டையர் கோடி மணிமந்திர சித்திநிலை
எய்தினர்கள் கோடி சூழக்
குருமணி யிழைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை
கொலுவீற் றிருக்கு நின்னைக்
கும்பிட் டனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெலாந் தீரும் வண்ணம்
மருமல ரெடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை
வாவென் றழைப்ப தென்நாள்
மந்திரகுரு வேயோக தந்திரகுரு வேமூலன்
மரபின்வரு மௌனகுருவே.
தாயுமானவர் - மௌனகுருவணக்கம் 8.

சருகுசல பக்ஷணம் உண்டு அன்னமய தேகத்தைப் பாதுகாப்பது சில சாதனங்களாற் பெறக்கூடும். இதற்காக வாயினின்று மூலம்வரையில் செல்லும் உணவுக்குழாய் முழுவதும் ஒருவன்வச மடங்குமாயின் உணவுக்குத் தக்கவாறு அவற்றிலுண்டாகும் ஜீரணாக்கினியான திராவகங்களை நினைத்தமாத்திரத்தில் உண்டாக்கலாம். இவ்வாறு செய்வதால் வயிற்றநோய் முதலிய இன்னல்கள் எவ்வித பண்டத்தாலும் உண்டாகா. இதற்காக யோகாப்பியாசிகள் தீர்த்தஸ்நானத்திற்குச் சென்று நீரில் இறங்கியவுடன் ஆசனம்வழியாக மேலே வயிற்றுக்கு நீரை இழுத்து வெளியாக்குவர். பெருங்குடல்வரையில் ஜலம் மேலே செல்வதில் யாதொரு கஷ்டமுமில்லை. ஏனெனில் ஆங்கிலேயர் வைத்தியத்தில் கையாளும் எனிமா என்னும் பேதிக் கருவியால் பெருங்குடலைக் கழுவுவது இக்காலத்தில் சாதாரணமாய் வைத்தியசாலைகளிலும், சில கனவான்கள் வீடுகளிலும் காண்கின்றோம். இக்கருவியின்றிப் பெருங்குடலைச் சுத்திசெய்திட யோகாப்பியாசிகள் பெருங்குடலின் தசைகளை மூளையினின்று வரும் நரம்புகளின் ஆட்சிக்கு உட்படுத்தி, நீரைக் குடலுள் இழுப்பதும், வெளியாக்குவதும் செய்வார். இது குறைந்தது ஆறுமாதம் பழகினாலன்றி எனிமா கருவியைப்போல் நீரை உள்ளே செலுத்தமுடியாது. அவ்வாறு பழகி யுட்கொண்டவன் நம்மைப்போல் நீரை உள்ளே சிலகாலம் நிறுத்திவைப்பதில் யாதொரு துன்பமும் படான். பிறகு குடல் சுத்தியாயிற்றென் றறிந்த பின்னர் அந்நீரை வெளியிற் கொண்டுவருவான். இப்பழக்கம் இவனுக்குச் சாதாரணமான பின்னர், சிறுகுடலுக்கும் பெருங்குடலுக்கும் இடையுள்ள ஒருமூடி இவன் வசமாகுமாதலால் மேற்கண்ட கருவியால் இந்நாளில் வைத்தியசாலையிலும் செய்யலாகாச் செய்கையில் சிறு குடலையும் சுத்திசெய்வான். இவ்வாறு பெருங்குடல் சிறுகுடல் தீனிப்பைவரையில் சுத்திசெய்த யோகி, நீரைத் தீனிப்பையினின்று வாயிடத்திலும் கொண்டுவருவான். இவ்வாறு வயிற்றுக்குள்ளிருக்கும் தேகயந்திரங்கள் சுத்தமடையும். பித்தக் கழிவுக்கான ஈரலும், பித்தப்பையும் எண்ணியவிதம் நடக்கும். மெல்லீரல், சிறுநீர்க் காய்கள் முதலியனவும் தன்வசமாய் நினைத்தவாறு தொழில் நடத்தும். இவையாவும் ஹடயோகத்தில் செய்யும் சில அப்பியாசங்களாம். நீரானது நீர்நிலைகளில் ஒருவேளை அசுத்தமாயும் கிருமிகள் சேர்ந்துமிருக்குமென்றெண்ணி, இவ்வடயோகிகள் கெந்தகமும் பாலும் உணவாகக் கொள்வார். இக்கெந்தகமானது சாதாரண தேகத்தில் ஜீரணமாகாதெனினும் இத்தகைய யோகிக்குச் சீரணமாகி அவன் உடம்பு கெந்தகவாசனை வீசும். *

---

* நான் கல்லூரியில் பெரியவகுப்பி லிருக்கும்போது ஹடயோகி யொருவரைக் கண்டு பழகிய அனுபவத்தால் இம்மர்மங்கள் அறியலானேன்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[409-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

வேறு

216. கருவடி நெடுநல்வேற் கண்ணி யின்னணம்
வெருவுடைய வினைப்பகை விலக்கும் வீறுசால்
மருவுடை மொழிகளாற் பரவி வாமன
திருவடிச் சேடமுந் திகழச் சூடினாள் 99

கரு - கரிய, நல் வடி நெடு வேல் கண்ணி - நன்றாய் வடித்துச்செய்யப்பட்ட நீண்ட வேல் போன்ற கண்ணையுடையவளான சுயம்பிரபை, வாமன - அருகதேவனுடைய, வெருவு உடை வினைப்பகை விலக்கும் வீறுசால் திருவடி-அச்சத்தைத்தரும் வினைகளாகிய பகையை ஓடச்செய்யும் பெருமைவாய்ந்த திருவடிகளை, இன்னணம் மரு உடை மொழிகளால் - இவ்வாறு (அன்பின்) வாசனையோடு கூடிய சொற்களால், பரவி - துதித்து, (அருச்சித்து) சேடமும் - [illegible] சித்த திருமாலியப்பூவையும், திகழ சூடி[illegible] தலையின்மீது விளங்கச் சூட்டிக்கொண்டாள்.

வடி-மாம்பிஞ்சின் பிளவையொத்த என்றலும் ஒன்று. வெருவுடை... வீறுசால் என்றது, 'திருவடிக்கு' விசேடணம், வாமனுக்கும் அடையாக்கலாம். மரு - வாசனை, இங்கே பக்திமணம்.

---

217. வானுயர் கடவுளை வயங்கு சேவடித்
தேனுயர் திருமலர்ச் சேடங் கொண்டபின்
மானுயர் நோக்கியர் பரவ மங்கைதன்
கோனுயர் வளநகர்க் கோயின் முன்னினாள். 100

வான் உயர் கடவுள் ஐ - விண்ணுலகத்திலுள்ள உயர்ந்த தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய அருகதேவனுடைய, வயங்கு செம்மை அடி - பிரகாசிக்கும் செவ்விதான அடிகளிலுள்ள, தேன் உயர் திருமலர் [illegible] பொதிந்து சிறந்த தூய்மையான திருமாலியப்பூ[illegible] கொண்டபின்-பெற்றுக்கொண்ட

[illegible] 500 [illegible]

பின், மங்கை - மங்கைப்பருவத்தினளாகிய அச்சயம்பிரபை, மான் உயர் நோக்கியர் - மானின் கண்ணைக்காட்டிலும் சிறந்த கண்களையுடைய பணிப்பெண்கள், பரவ - தன்னைத் துதித்து உடன் வர, தன் கோன் உயர் வளம் நகர்-தனது தந்தையாகிய அரசன் வாழும் உயர்ந்த வளப்பம் மிக்க இரதநூபுர நகரத்தின் இடையிலுள்ள, கோயில் முன்னினாள் - அரண்மனையைச் சேர்ந்தாள்.

'கடவுள் ஐ (அழகு) வயங்கு' என்றும் பிரித்துரைக்கலாம்.

---

218. வெஞ்சுடர் வேலவற் குணர்த்தி மெல்லவே
பஞ்சுடைச் சேவடி பரவச் சென்றுதன்
அஞ்சுடர் மெல்விரல் சிவப்ப வாளியற்
செஞ்சுட ரங்கையிற் சேடம் நீட்டினாள். 101

(அவள்)பரவ-சேடியர் அவ்வாறு தன்னைத் துதிக்க, பஞ்சு உடைச் செம்மை அடி அம் சுடர் மென்மை விரல் - செம்பஞ்சுக் குழம்பு பூசிச் செவந்த அடியின் அழகு விளங்கும் மென்மையான விரல்கள், சிவப்ப - செவந்து காட்டும்படி, மெல்லவே சென்று - மெல்ல நடந்து சென்று, வெம் சுடர் வேல் அவன்கு- வெப்பமுள்ள ஒளியோடு கூடிய வேலையேந்திய அரசனுக்கு, உணர்த்தி-தான் கொண்ட விருதம் முற்றுப்பெற்றதைத் தெரிவித்து, ஆள்இயல்- அரசாட்சியின் இலக்கணங்களாகிய சங்கரேகை பதுமரேகை முதலியவை விளங்கப்பெற்ற, செம்சுடர்-செவந்த நிறத்தையுடைய, அகம்கையில்-அவனது உள்ளங்கையில், சேடம் நீட்டினாள்-நிருமாலியப்பூவை தன் கையாற் கொடுத்தாள்.

ஆள் இயல் - ஆளும் ராஜலக்ஷணங்கள். அங்கை - அகங்கை.

---

219. அல்லியி னரவவண் டிரிய வாய்மலர்
வல்லியின் வணங்கிய மகளை மன்னவன்
முல்லையஞ் சிகழிகை முச்சி மோந்திவை
சொல்லிய தொடங்கினன் சுடரும் வேலினன்.

அல்லியின் அரவ வண்டு இரிய-பூக்களின் அகவிதழ்களிலே குடைந்து தங்கிய ஒலியோடு கூடிய வண்டுகள் சிதறி யோடும்படி, ஆய்மலர் வல்லியின் - அழகிய பூக்கொடியைப்போல, வணங்கிய மகளை-தன்னடிகளில் விழுந்து வணங்கிய மகளை, சுடரும் வேலினன் மன்னன்- பிரகாசிக்கும் வேலையுடையமன்னன், முல்லை சிகழிகை முச்சி மோந்து - முல்லை மாலையைச் சூடிய தலையின் உச்சியைமோந்து, இவைசொல்லிய தொடங்கினன் - பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தான்

அல்லி- பூவின் அகவிதழ், the inside petals of a flower. (புல்லி - புறவிதழ்.) முல்லைச் சிகழிகை 'முச்சி' என்றது அவளது கற்பின் விசேஷத்தை விளக்க. முச்சி - உச்சி. வேலினன்-மன்னன். பண்புத்தொகை.

---

220. தேன்துணர் பலவுள வேனுஞ் செங்குழை
மாந்துணர் வயந்தனை மலரத் தோன்றுமே
பூந்துண ரோதிநீ பிறந்து பொன்செய்தார்
வேந்துவந் திறைஞ்சயான் விளங்கு கின்றதே

தேன் துணர் பல உளவேனும் - தேனையுடைய பூங்கொத்துக்கள் பல இருப்பினும், செம் குழை மா துணர் - செவந்த தளிர்களோடு கூடிய மாமரத்தின் பூங்கொத்துக்கள், வயந்தனை - மன்மதனை, மலர் - மலர்விக்க (மனமகிழ்ந்து விளங்கச் செய்யும்படி), தோன்றும் - பூக்கும். (அதுபோல்) பூந்துணர் ஓதி நீ - பூங்கொத்துக்களை அணிந்த கூந்தலையுடையவளாகிய நீ, பிறந்து -என்மகளாய்ப் பிறந்ததால், பொன் செய் தார் வேந்து-பொன்னாற்செய்த ஆரங்களையணிந்த மன்னர்கள், உவந்து வந்து இறைஞ்ச - சந்தோஷத்துடன் வந்து என்னை வணங்கும்படியாக, யான் விளங்குகின்றதே - நான் சிறப்புற்று விளங்குவது ஆகும்.

வயந்தன் - வஸந்தகாலத்துக்கு உரிய மன்மதன். மலர - செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை; ஐ என்பதைச் சாரியையாக ஒதுக்கி, வயந்தன் மலர எனக் கொள்ளினும் அமையும். பூந்துணரோதி, அன்மொழித்தொகை. வேந்துவந்து - வேந்து உவந்து வேந்து வந்து, இரட்டுற மொழிதல் என்னும் உத்தி. வேந்து - சாதியொருமை.

வசந்தகாலத்தே மலரும் பூக்கள் பலவிருப்பினும், மாந்தளிரும், மாமலரும், மாங்குயிலும் அக்காலத்துக்கு விசேஷச் சிறப்பைத் தந்து விளங்குவதுபோல, பலவகைச் சிறப்புக்களும் பொருந்தி இருந்தாலும், தான் சுயம்பிரபையின் பிறப்பால் விசேஷச் சிறப்பைப் பெற்றதை அரசன் இங்கே குறிப்பிட்டான் என்க.

---

221. கங்கைநீர் பாய்ந்துழிக் கடலுந் தீர்த்தமாம்
அங்கணீ ருலகெலா மறியப் பட்டது
நங்கைநீ பிறந்ததற் பின்னை நங்குடி
வங்கநீர் வரைப்பெலாம் வணக்கப் பட்டதே.

கங்கைநீர் பாய்ந்த உழி - கங்கையாற்றின் நீர் பாய்ந்த விடத்தில், கடலும் - (அசுத்தமான) கடலும், தீர்த்தமாம் - சுத்தமான புண்ணிய தீர்த்தமாகும். அங்கண்நீர் உலகு எலாம் அறியப்பட்டது- (இவ்வுண்மை) விசாலமான கடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ளவர்கள் யாவராலும் அறியப்பட்டது ஒன்றே. (அதுபோல) நங்கை நீ பிறந்ததன் பின்னை - சிறந்த மங்கையாகிய நீ (எனக்கு மகளாகப்) பிறந்த பின்பு, நம் குடி - நமது குலம், வங்கம் நீர் வரைப்பு எல்லாம் - கப்பல்கள் ஓடும் கடலாற் சூழப்பட்ட நிலமெல்லாம், வணக்கப்பட்டது (என்னை) வணங்கும்படி செய்யப்பட்டது.

---

222. போதுலாந் தாமரை பூத்த பொய்கையைத்
தீதுலாங் கீழுயிர் தீண்டச் செல்லல
மாதுலா மடந்தைநீ பிறந்திம் மண்டிலம்
ஏதிலா ரிடைதிற மிகந்து நின்றதே. 105

போது உலாவும் தாமரை - பகற்பொழுது சேர்ந்த தாமரை, பூத்த பொய்கை-மலர்ந்துள்ள தடாகத்தை, தீது உலாவும் கீழ் உயிர்-கெட்டகுணத்தோடு கூடிய அற்பப்பிராணிகள், தீண்ட செல்லல - அசுத்தமாக்கும்படி செல்லமாட்டா, (அதுபோல), மாது உலாவும் மடந்தை நீ-அழகு நிரம்பிய மங்கை நீ, பிறந்து- பிறத்தலால், இம்மண்டிலம்-இந்த வித்தியாதரஉலகம், ஏதிலார் இடைதிறம் - பகைவர்கள் (அஞ்சிப்) பின்னிட்டொதுங்கும் வண்ணம், இகந்து நின்றது - எல்லைகடந்து நின்றது.

தாமரைப் பொய்கையை அன்னம் முதலிய சிறந்த பறவைகள் சென்றடையுமேயன்றிக் காகம் முதலிய கீழ்ச்சாதிப் பறவைகள் அணுகமாட்டாவாறுபோல, நீ தோன்றிய இந்த வித்தியாதர உலகம், நற்குணம் வாய்ந்த நட்பரசர்களாலன்றி, தீக்குணமுடைய பகைவரால் அணுகப்படாததாயிற்று, என்றதாம்.

போது, பகற்பொழுது. மாது - மாதர், அழகு. ஏதிலார் - பகைவர்.

---

223. வானகத் திளம்பிறை வளர வையகம்
ஈனகத் திருள்கெட வின்ப மெய்துமே
நானகக் குழலிநீ வளர நங்குடி
தானகத் திருள்கெடத் தயங்கு கின்றதே. 106.

வான் அகத்து - விண்ணிடை, இளம்பிறை வளர - இளம்பிறை நாளுக்கு நாள் கலைநிரம்பி வளர, வையகம்-இந்தப் பூமி, ஈனத்து - இழிவான, இருள் கெட இன்பம் எய்தும் - இருள் நீங்கி இன்பமுறும். நானம் குழலிநீ-புழுகணிந்த கூந்தலையுடையநீ, வளர - பிறந்து வளர, நம் குடி - நமது குலம், அகத்து இருள் கெட- தன்னிடத்துப் பகையாகிய இருளின்றி, தயங்குகின்றது - விளங்காநின்றது.

வானம், ஈனம், நானம் என்பன 'க'ப்பிரத்தியம் பெற்று வானகம், ஈனகம், நானகம் என வந்தன. தான் அகம்-தான், அசை. 'ஈன்' என்பதை இவ்வுலகமெனக் கொண்டு, 'வையகம் ஈன் அகத்து' என்பதற்கு 'வையமாகிய இவ்வுலகத்தில்' என்றுரைப்பாருமுளர்.

---

224. கண்பகர் மல்லிகை கமழக் காதலாற்
சண்பகத் தனிவனந் தும்பி சாரும்நீ
பெண்பகர் திருவனாய் பிறந்து நங்குடி
மண்பக ருலகெலா மகிழச் செல்லுமே. 107.

மல்லிகை கமழ - மல்லிகை மலர்கள் பல மலர்ந்து வாசனையை வீசி நிற்பினும், (அவற்றைத் தவிர்த்து) தும்பி - வண்டுகள், கண்பகர் சண்பகம் தனிவனம் - கண்ணுக்கழகிய ஒப்பற்ற (வாசனையோடுகூடிய) சண்பக மலர்வனத்தை, காதலால் சாரும் - ஆசையோடு சென்று அடையும், பெண்பகர் திரு அன்னாய் நீ - திருமகளுக்கு ஒப்பானவள் என்று பெண்களும் புகழும் நீ, பிறந்து - பிறத்தலால், நம் குடி - நமதுகுலம், மண்பகர் உலகு எல்லாம் - மண்ணென்று சொல்லப்படும் இவ்வுலகத்திலுள்ள அரசரெல்லாம், மகிழச் செல்லும் - மகிழ்ந்து வந்து சாரப்படும்.

நறுமணத்தையுடைய மல்லிகை முதலிய பல மலர்கள் இருப்பினும் அவற்றை விட்டு மிகச்சிறந்தவாசனையோடுகூடிய சண்பகவனத்தை விரும்பிச் செல்லும் வண்டைப்போல அழகுவாய்ந்த கன்னியர்பலர் இருந்த போதிலும் அவர்களை மதியாது பேரழகுவாய்ந்த நீ பிறந்து வளரும் நங்குலத்தை நச்சி அரசர் பலர் வந்து சேர்கின்றார்கள், என்றவாறு.

கண்பகர் - 'பகர்' என்பது இங்கே பொருட்சிறப்பின்றி எதுகைபற்றி வந்த சொல். பெண்பகர்-பெண்களுக்குள் சிறப்பித்துக் கூறப்படும், என்றுமாம். செல்லும் - வரும்.

---

225. கொவ்வையந் துவரிதழ்க் கோல வாயவட்
கிவ்வகை யணியன கூறி யீண்டுநும்
அவ்வைதன் கோயில்புக் கடிசி லுண்கென
மவ்வலங் குழலியை மன்ன னேயினன். 108.

கொவ்வை துவர் இதழ் - கொவ்வைக்கனியைப் போன்ற சிவந்த உதடுகள் பொருந்திய, கோலம் வாய் அவள்கு - அழகிய வாயையுடைய அச்சுயம்பிரபைக்கு, இவ்வகை - இவ்விதம், அணியன - பொருந்திய அன்புமொழிகளை, கூறி - சொல்லி, 'ஈண்டு - இனி, நும் - உனது, அவ்வைதன் கோயில் புக்கு - தாயிருக்கும் அந்தப்புரத்தையுற்று, அடிசில் உண்க - சமைத்த உணவை உண்க' என - என்று, மன்னன்-அரசன், மவ்வல் குழலியை-முல்லை மலர்கள் சூடப்பெற்ற கூந்தலையுடைய தன் மகளை, ஏயினன் - செல்ல விடுத்தான்.

அம் இரண்டும் சாரியை. அணியன, செய்யுள்விகாரம்; அழகான உபசாரமொழிகள் என்றுமாம். நும்- ஒருமையில் மயங்கிவந்த பன்மை. அவ்வை- அன்னை, அடிசில்-சமைத்த உண்டி. முந்திய நாளெல்லாம் பட்டினியிருந்து நோன்பு புரிந்தாளாதலின், உட்சென்று பாரணை செய்யும்படி அவளை அவன் விடையளித்து அனுப்பினன் என்க. ஏயினன், ஏவினன் என்பதன் மரூஉ. ஏயினன் - பணித்தான், கட்டளையிட்டான் என்றுமாம்.

---

226. பல்கலம் பெரியன வணியிற் பாவைதன்
அல்குனோ மெனச்சிலம் பணிந்து மெல்லவே
செல்கவென் திருமக ளென்று செம்பொனால்
மல்கிய முடியினன் மகிழ்ந்து நோக்கினன் 109

பெரியன பல்கலம் அணியின் - பெரிய பல ஆபரணங்களை அணிந்தால், பாவைதன் அல்குல் - மகளின் இடை, நோம் என - வருந்துமெனக்கருதி, சிலம்பு அணிந்து-காலிற் சிலம்பைமாத்திரம் அணிந்து, 'என் திருமகள் மெல்லவே செல்க என-எனது செல்வமகள் மெதுவாய்ச் செல்க' என்று சிலதியரிடம் சொல்ல (அவரும் அவ்வாறே செய்ய), செம்மை பொன்னால் மல்கிய முடியினன் - செம்பொன்னாற் செய்யப்பட்டு விளங்கும் கிரீடத்தை அணிந்த மன்னன், மகிழ்ந்து நோக்கினன் - உட்செல்லாநின்ற தன் மகளை மனமகிழ்ந்து நோக்கினன்.

மணமாகாக் கன்னியர்க்குச் சிலம்பணி இன்றியமையாமையானும், அது காலிலணியப்படுதலால் இடையை வருத்தாதாகலானும் 'சிலம்பணிந்துசெல்க' என்றான் என்க.

---

227. மண்ணருங் கலமெலாம் வலிதின் வவ்வினும்
விண்ணருங் கலமெலாம் விதியி னெய்தினும்
பெண்ணருங் கலமிது பெறுதல் மானுடர்க்
கெண்ணருந் தகைத்தென விறைவ னெண்ணி
[னன். 110.

மண் அரும் கலம் எல்லாம் - இம்மண்ணுலகத்திலுள்ள அருமையான ஆபரணங்களை யெல்லாம், வலிதின் வவ்வினும் - ஒருவன் தன் வலிமையால் பிறரிடமிருந்து கவர்ந்தானாயினும், விண் அரும் கலம் எல்லாம்-விண்ணுலகத்திலுள்ள அருமையான ஆபரணங்களை யெல்லாம், விதியின் -தனது நல்வினைப் பயனால், எய்தினும்-பெற்றானாயினும், பெண் அரும் கலம் இது- பெண்களுக்கெல்லாம் அரிய ஆபரணமெனத்தகைய இவளை, பெறுதல் - மனைவியாக மணந்துகொள்ளப் பெறுதல், மானுடர்க்கு - மனிதர்களுக்கு, எண் அரும் தகைத்து என- மனதால் நினைப்பதற்கும் அசாத்தியமான காரியமென்று, இறைவன் - ஜ்வலனஜடியாசன், எண்ணினன்-நினைத்தான்.

கலம் - கலன், ஆபரணம். விதி - ஊழ்வினை. மானுடர் - 'மனுஷ்யர்' என்னும் வடமொழித் திரிபு.

---

228. மையணி வரையில்வாழ் மன்னர் தொல்குடிக்
கையணி நெடுநல்வேற் காளை மார்களுள்
நெய்யணி குழலிவட் குரிய நீர்மையான்
மெய்யணி பொறியவ னெவன்கொல் வீரனே.

மை அணி - மேகங்களால் அலங்கரிக்கப்பெற்ற, வரையில்-இந்த வெள்ளிமலையாகிய வித்தியாதர வுலகில், வாழும் மன்னர் தொல்குடி - வாழும் பழமையான அரசகுலங்களிலுதித்த, கை அணி நெடு நல் வேல் - கையிலேந்திய நீண்ட நல்ல வேலையுடைய, காளைமார்களுள் - யௌவன புருஷர்களில், நெய் அணி குழல் இவட்கு - வாசனைத்தைலம் தடவிய கூந்தலையுடைய இவளுக்கு, உரிய நீர்மையான்-கணவனாகத் தக்கவனும், மெய் அணி பொறியவன் - உடலிற்பொருந்திய உத்தம லக்ஷணங்களையுடையவனும் ஆகிய, வீரன் - ஒருவீரன், எவன் கொல் - எவனோ. (அறிகிலேன்.)

காளை - கட்டிளமையோன். பொறி - அடையாளம், இலக்கணம், ஸாமுத்திரிகாலக்ஷணம். 'மெய் அணி பொறியவன்' என்பதற்கு மார்பிலே திருமகளைத் தரித்தவனாகிய திருமால் (பொறி - திருமகள்) எனக் கொண்டு அத்திருமாலின் அம்சமாகிய அரசன் எனினும் அமையும்: 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே' என்னும் திருவாய்மொழியால் இதனைத் தெளிக.

---

229. பொலங்கலக் குரியவாம் பொருவின் மாமணி
இலங்கல மென்கில வீயஞ் சேர்த்தினும்
குலங்கலந் தில்வழிக் குரவர் கூட்டினும்
அலங்கலங் குழலியர் அன்றென் கிற்பவோ.112.

பொலம் கலம்கு - பொன்னாபரணங்களில், உரிய ஆம் - வைத்து இழைப்பதற்குரிய, பொருவு இல் - ஒப்பற்ற, மாமணி - உயர்ந்த இரத்தினங்கள், ஈயம் சேர்த்தினும் - ஈயத்திலே நாம் அவற்றைப் பதித்தாலும், இலங்கலம் என்கில - 'நாங்கள் விளங்கமாட்டோம்' என்று சொல்லமாட்டா. (அதுபோல) அலங்கல் அம் குழலியர்-பூமாலையை யணிந்த அழகிய கூந்தலையுடைய மங்கையர், குரவர்-தமது பெற்றோர், குலம் கலந்து இல்வழி - சம்பந்தம் பண்ணத்தகாத தாழ்ந்த குலத்திலே, கூட்டினும் - தம்மை மணஞ்செய்து கொடுத்தாலும், அன்று - இது தகாது ; இதற்கு யாம் உடம்படேம்', என்கிற்பவோ - என்று சொல்வார்களோ ? (சொல்லமாட்டார்கள்).

'பொன்கலம்' என்பது 'பொலங்கலம்' என்றாயது 'பொன்னென் கிளவி' (எழுத்ததி - புள்ளிமயங்கியல், 61) என்ற தொல்காப்பிய சூத்திரத்தால். குரவர்-இருமுதுகுரவர், தாய்தந்தையர்.

---

230. அந்தைதா முறுவது கருதி யாருயிர்த்
தந்தைதா யென்றிவர் கொடுப்பிற் றையலார்
சிந்தைதா யிலாதவர் திறத்துஞ் செவ்வனே
நொந்துதாம் பிறிதுரை நொடிய வல்லரோ. 113.

அந்தை-அழகினை, தாம் உறுவது கருதி - தாங்கள் பெறுவதை உத்தேசித்து, ஆருயிர்-அரிய உயிருக்குச் சமானமான, தந்தை தாய் என்ற இவர்-தாய்தந்தையர்கள், கொடுப்பின்- தங்களை மணஞ்செய்து கொடுப்பாராயின், தையலார் - அழகிய பெண்கள், செவ்வனே சிந்தை தாய் இலாதவர் திறத்தும் - நன்றாகத் தம் மனம் சென்று பொருந்தாதவர்களைப் பற்றியும், நொந்து - மனம் வருந்தி, பிறிது உரை - (விருப்பு மொழிகளையன்றி) வெறுப்பு மொழிகளை, நொடிய வல்லரோ-சொல்லவல்லரோ ? (அல்லார்.)

அந்து - அந்தம் (அழகு) என்பதின் லோபம் ; 'அதை'யென்பதின் விரித்தல் விகாரமாகக் கொண்டு, மணவினையைச் சுட்டி நின்றதாக உரைத்தலும் ஒன்று. தாய் இலாதவர் - தாவிச்சென்று பொருந்தாதவர் ; தாய், தாவி. 'செவ்வனே தாயிலாதவர்' என முன்னே கூட்டுக. பிறிதுரை - மாறான வார்த்தை. நொடித்தல்- சொல்லுதல்.

மானதசாத்திரம்

[PSYCHOLOGY]

[411-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

காலவுணர்வு.

மக்களுக்கு ஆண்டு ஏற ஏற, ஆண்டின் அளவை குறிகித்தோன்றுகின்றது. பத்தாண்டுப் பையன் ஒருவனுக்கு, ஓராண்டு, அவன் வாழ்நாளில் பத்தில் ஒன்றாதலின், அத்துணை நீண்டதாக விளங்குகிறது. ஐம்பது ஆண்டுக்கிழவனுக்கோ, ஓராண்டு, அவன் வாழ்நாளில் ஐம்பதில் ஒன்றாதலின் அத்துணைக் குறுகியதாக விளங்குகின்றது. இவ்வியல்பு ஆயதுஎதனாலே? நேர்நிலை ஈராழியை (Bicycle) ஓட்டக்கற்கின்றேன். கற்கும்போது, "எப்படிக் கைப்பிடியைப் பிடிக்கின்றேன், எப்படிக் காற்படியைமிதிக்கின்றேன், எவ்வாறு தலையை நிமிர்த்துகின்றேன், எவ்வாறு உடலை ஒருபால் கோணுது அமைக்கின்றேன்" என்றவையனைத்தும் நினைவிற்கு வருகின்றன. கற்றுப் பழகியபின்னர், இவையெல்லாம் பழக்கமாக மாறிவிடுவதால், இவற்றிலொன்றையும் நான் நினைக்கமுடியாது. பழக்கமான பொருள்களிடையே சென்றால், அவை பின்னர் நினைவிற்கு வருவதில்லை ; புதுப்பொருள்களிடை சென்றால் அவை நினைவிற்கு வருகின்றன. எனவே பழக்கமான பொருள்களிடையே, ஒரு மணிப்போதும், புதுப்பொருள்களிடையே ஒருமணிப்போதும் கழித்தோமானால், புதுப்பொருள்களிடையே கழித்த காலமே நீண்டு தோன்றுகின்றது. சிறுபொழுதில் நமது துய்த்துணர்வு புதிதுபுதிதாக் எழுகின்றது. அதனால், இளமைப்போதில் ஆண்டளவு நீண்டும், முதுமையில் ஆண்டளவு குறுகியும் தோன்றுகின்றது.

கைதட்டல் கன்னல் நாழி முதலிய உதவியின்றியும் காலத்தைப் பழக்கத்தால் அளந்தறிகின்றோம். சிலர் இரவில் படுக்கும்போது, மறுநாட் காலையில் நான்கு மணிக்கு எழவேண்டும் என்று எண்ணிப் படுத்தால் அவ்வண்ணமே இமைப்போதும் தவறாது கன்னல் நாழி நான்கு அடிக்கும்போது எழுகின்றனர். பழக்கத்தால் நாமும் இவ்வாறு எழுதல் கூடுமாம். காலத்தையளக்கும் கருவியொன்று நம்முள்ளும் புதைக்கப்பட்டுள்ளதோ ? கைதட்டல் ஒலிகேட்டல் முதலிய உதவிகள் இல்லாதபோது காலத்தை எவ்வாறு அளக்கின்றோம். காலத்தை அறிவதற்கு என வேறொரு புலன் நம்மிடத்தில் உண்டோ ? அவ்வாறு காலத்தை யறியும் புலன் ஒன்றும் இல்லை. கைதட்டல் முதலிய உதவியில்லாதபோதும், புறச்செயல்கள் ஒழிந்தனவே யன்றி, உடலின் உட்செயல்கள் ஒழியவில்லை யன்றோ ? நமது குருதிசால், ஓரே அளவாகத் துடிக்கின்றது ; நுரையீரல், விரிந்து சுருங்குகின்றது; கண்ணிமைக்கின்றது ; வேறு உறுப்புகளும் இயங்குகின்றன. வாளா இருக்கும்போதும், குருதிசாலின் துடிப்புக் காதிற்குக் கேட்கின்றதன்றோ ? இவையே, காலத்தை அளக்கின்றன வெறுங்காலமும், இயங்கு காலமாகவே விளங்குவது காண்க.

உலகத்துப் பொருள்கள் புலனாவது எங்ஙனம் ? நான் ஒளியை உணர்கின்றன. மின் அலைகள் என் மூளையைத் தாக்குகின்றன. அதனால் அங்கு எழும் கிளர்ச்சிகள் அவ்வலையின் நிழல்போல, அவ்வலைகளை அறிவிக்கும் அறிகுறியாகின்றன. என் உணர்வுதான் அவ்வலைகள் என்று கூறுவதற்கில்லை. ஆனால் காலத்தைப்பற்றிய உணர்வுமட்டும் வெறும் அறிகுறியாகாமல், வெளியுள்ள காலத்தின் எதிர்ஒளி யாகின்றது. காலமாவது 'முன்னிகழ்ந்தது' 'பின் நிகழ்ந்தது' என்று பேசுவதற்கிடமாய செயல்களின் போக்கேயாம். உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது. நேற்றுப் பச்சென்றிருந்த ஒரு மாங்கனி, இன்று பொன்னெனப் பழுக்கின்றது. சிறுவன் நாளடைவில் கிழவன் ஆகின்றான். நான் நேற்று எழுதிவைத்த தாள்களின்மேல் இன்று தூசுபடிந்திருக்கின்றது. இவ்வாறு எங்கும் மாறுதல்களையே காண்கின்றோம். ஈதே காலப்போக்கு. நமது உள்ளமும் இச்செயல்களின் போக்கை உள்ளவாறு உணர்கின்றது. நமது உள்ளத்திலும் மாறுதல்கள் எழுந்துகொண்டே இருக்கின்றன. புறப்பொருள்களில் காலப்போக்குஎன்பது ஒன்றும் இல்லை என்றாலும், நமது உள்ளச்செயல்கள் காலவடிவினவாகவே நிற்கும். உள்ளத்தின் செயல்கள் ஒன்றின்பின் ஒன்றாக எழுந்து காலத்தைச் சுட்டுகின்றன. பல பொருள்கள் நேரே இருந்தபோதும், அவற்றை ஒன்றின்பின் ஒன்றாக உற்றுப்பார்த்து அறிகின்றோம். அப்போது ஒன்றை யறியும் செயலுக்குப்பின் மற்றொன்றை யறியும் செயல் எழுகின்றது. எனவே, உலகம் யாறுதிருந்தபோதிலும், இவ்வுள்ளத்தியல்பு இவ்வாறு காலப்போக்கை யுணரும். காலப்போக்கு உலகத்து நிகழ்ச்சியிலும் காணக்கிடப்பதால், மற்றைய புலனுணர்வுகள்போலக் காலவுணர்வு வெளிப்பொருள்களின் அடையாளமாகமட்டும் விளங்காமல், உலகத்திலே காலம் எங்ஙனம் உள்ளதோ அங்ஙனமே உள்ளத்திலும் எதிர் ஒளியாக விளங்குகின்றது. இடியின் புலன் மின்னலின் புலனைப் பின்பற்றி எழுகின்றது. ஒளி முன்னாக வந்து கண்ணைத் தாக்குகின்றது; பின்னர் ஒலிவந்து காதைத் தாக்குகின்றது. உலகத்திலே இடியே முன்னர் எழுந்ததாயினும், ஒளியோ மிகவிரைவாக நடக்கின்றது, ஒலி மிக மெல்லென நடக்கின்றது. ஆதலின், ஒலியைவிட முந்திவந்து ஒளியானது நம் மூளையைத் தாக்குகின்றது. எனவே இடியையும் மின்னலையும்பற்றி உள்ளத்தெழும் காலவுணர்வு வெளியுலகக் காலப்போக்கோடு இருக்கின்றது.

இவ்வாறு வெளியுலகக் காலப்போக்கு நமது உள்ளத்தில் நிழலிடுவதால், காலத்தை நாம் உணர்வதில் என்ன வியப்பு என்று வினவுவர் ஒரு சாரார். நமது நனவும் காலத்தோடே ஓடுகிறதாம். உள்ளச்செயல்கள் வெளிப்பொருள்களின் நிழல்களேயாம். வெளிப்பொருள்களின் மாறுதலே காலவுணர்வைத் தூண்டி எழுப்புகின்றதாம். வெளிப்பொருள்களின் போக்கு நமது மூளையில் எதிரொலியாகக் கேட்கப்படுகின்றதாம். மூளையோ, அந்தக் காலப்போக்கை மனதிற் புகுவிக்கின்றதாம்.

இவ்வளவு எளிதாகக் காலவுணர்வை விளக்கிவைக்க முடியாது. மனதில் எழுகின்ற செயல்கள் தொடர்பாய் விளங்குகின்றன என்பது ஒன்று ; அத்தொடர்ச்சியைத் தொடர்ச்சியாக அம் மனம் உணர்வது வேறொன்று. மாம்பழத்தின்பின் வாழைப் பழத்தையும் அதன்பின் பலாப்பழத்தையும் கண்டேன். இப்படிக்கண்டஎன் மனத்திலும்மாம்பழஉணர்வின் பின் வாழைப்பழ உணர்வும் அதன்பின் பலாப்பழ உணர்வும் எழுகின்றன.எனது மனமும் இத்தொடர்ச்சிவடிவாக நேரே ஓடுகின்றது. இவ்வாறு தொடர்ச்சி வடிவாக ஓடும் மனம், "மாம்பழம் முன் வந்தது" "வாழை அதன்பின் வந்தது" என்று முன்பின் என அறியவேண்டுமானால், அத்தொடர்ச்சியின் நின்றும் மேலெழுந்து அந்நேரோட்டத்திற்குக் குறுக்காக நின்று அத்தொடர்ச்சியை யுணர்தல்வேண்டும். தொடர்ச்சியாய்ச் செல்லும் உணர்வு. அத்தொடர்ச்சியின் உணர்வாவது எங்ஙனம்? தொடர்ச்சியின் உணர்வின் பிறப்பிடத்தையன்றோ நாம்தேடுகின்றோம்.

கழிந்ததைக் கழிந்தது என்று உணரவேண்டுமானால், அது நிகழ்காலத்தில் நினைவிற்கு வரவேண்டும். நிகழ்கால அளவில் அது சிக்கவேண்டும். கழிந்ததன் நினைவும் நிகழ்வதன் புலனும் எதிர்வதன் நாட்டமும் இயைந்தே நிகழ்காலமாகின்றது எனக் கண்டோம்.

நான் ஒரு நாயைக் காண்கின்றேன். அப்பொருட் காட்சியால் என் மூளையில் நரம்புக்கிளர்ச்சிகள் எழுகின்றன. அந்நரம்புக்கிளர்ச்சி முழுதும் வெளியோடிப் பாய்வதில்லை. சிறிதுபொழுதுவரை அங்குத் தேங்கியே மெல்லப் பாய்கின்றது. பின் கண்ணை மூடுகின்றேன். நான் கண்ட நாயின் வடிவம் என் கண்ணின்நின்றும் மறையவில்லை. தேங்கிய கிளர்ச்சி இன்னும் வெளியே பாயவில்லை என்பதனை இது வற்புறுத்துகின்றது. பின்னர் அவ்வடிவம் மறைகின்றது; கிளர்ச்சியும் அடங்குகின்றது என்பதாயிற்று. மூளையில், உணர்வாகவோ நினைவாகவோ செயலாகவோ கிளர்ச்சிகள் எழுந்தபோது, அக்கிளர்ச்சியின் சிறிதளவு பின் தயங்குகிறது. அவ்வாறு கழிந்த கிளர்ச்சியின்மிகுதி, பின்தயங்கும்போது, புதியஉணர்வுகளும் நினைவுகளும் செயல்களும் எழுவதால் மூளை தாக்

குண்டு புதிய கிளர்ச்சிகளை எழுப்புகின்றது. கழிந்த கிளர்ச்சியின் தேக்கமும், புதிய கிளர்ச்சியின் ஆக்கமும், ஒருசிறிது பொழுதுவரை ஒன்ருய் நிற்கின்றன. அதனுல் நமது உணர்வின்கண் கழிந்ததன் நினைவும் சிறிதளவு விளங்குகின்றது. கழிவும் நிகழ்வும் அவ்வாறு கிளர்ச்சிவடிவாக இயைந்து தோன்றுகின்றன. கழிந்தகிளர்ச்சியும் புதியகிளர்ச்சியும் ஒருங்கு நிற்பதுதான் காலவுணர்வாக விளங்குகிறதென ஜேம்ஸ் என்ற பெரியார் விளக்குகின்ருர்.

புலனுணர்வுதான் நிகழ்காலத்தினைப் பிரித்துணர்த்துவதாகும். நம் செயல் தடைபடுமாஞல் நிகழ்காலம் நீண்டு விளங்குகின்றது. தடைபடாது நின்ருல் குறுகி விளங்குகின்றது. பசித்த குழந்தை பாலை எதிர்பார்த்து அழும்போது அதற்கு நிகழ்காலம் நீள்கின்றது. விளையாடும் குழந்தைக்கோ நிகழ்காலம் குறுகிக்கழிகிறது. கழிவும் எதிர்வும் உணர்வுநிலையில் அவ்வளவு தெளிவாகப் புலனுவதில்லை. நினைந்து பார்க்கும்போது எதிர்காலமும் இறந்தகாலமும் நன்குவிளங்குகின்றன. குழந்தையின் எதிரே ஒரு பளபளப்பான பந்தினைப் பிடிக்கின்றேன், பின்னுக அதனை மறைத்துக் கொள்கின்றேன். "போச்சு' (போயது) என்று என்னேடு கூவும் அந்தக் குழந்தை இறந்தகாலத்தைப் 'போச்சு என்ற நனவொடு அறிகிறது. மறைத்த பந்தைக் குழந்தையெதிர் கொண்டுவந்து காட்டிப் பின் மறைக்கின்றேன். இவ்வாறு பலமுறை செய்தபின்னர் நான் பின்புறமாகப் பந்தைமறைத்ததும் "வருகிறது"என்று என்னேடு கூவும் குழந்தை எதிர்காலத்தைப் "பெறுகிறது' என்ற நனவொடு அறிகிறது. திடீர் என்று நம் செயல் தடைபடும்போது உணர்வுநிலையிலும் இந்தக் காலவுணர்வு தெளிவாக உருப்பெற்று விளங்கிறது. தன் வாயிற் கிடக்கும் தசையின் நிழலை ஆற்றிலே கண்டு பேரவாக்கொண்டு, அந்நிழலைக் கவ்வத்தாவித் தன் வாய்த்தசையையும் இழந்த நாய் "போயது"என்றெழும் இறந்தகாலத்தைத் தெளிவாக உணர்ந்தது. நமது செயல் அப்போதே முற்றுப்பெருது நீட்டிக்குமாஞல் எதிர்காலம் விளக்கமுறுகின்றது. தன் தீனிக்காகக் காத்திருக்கும் நாய் தன்தலைவனது அசைவைக் கேட்குந்தோறும் " வருகிறது " என்று எழும் எதிர்காலத்தைத் தெளிவாக உணர்கின்றது.

உணர்வுநிலையில் நிகழ்வன இவை. எண்ணங்களும் நினைவுகளும் எழுந்தபோது இறந்தகாலமும் எதிர்காலமும் தெளிவுறுகின்றன. பசித்திருக்கும் குழந்தை தன் தாய் தனக்காகப் பாலை அடுப்பேற்றிக் காய்ச்சுவதைப் பார்க்கின்றது. தான் பாலுண்ணுவதை மனதில் எண்ணிப்பார்க்கின்றது. மனதில் எண்ணிக் கண்ட பசியாறிய நிலையோடு, தான் அப்போது உணரும் பசிநிலை மாறுபட்டு விளங்குகின்றது. அந்த நிலையில் 'வருகிறது' 'வருகிறது' என்றநனவு மிகத் தெளிவடைகின்றது. இந்தப்படியே எதிர்கால வுணர்வும் நினைவுகளால் திருத்தமான உருப்பெறலாகின்றது. ஓர் அறைக்குள் ஒரு குழவி விளையாடிக்கொண்டிருக்கிறது. அவ்வறையில் கூரையிலுள்ள ஒரு கண்ணுடி வட்டத்தின் வழியாகக் கதிரவனது ஒளி சுவரினில் நிழலிடுகின்றது. அவ்வொளியைக்கண்ட குழவி கூத்தாடிக் களிக்கின்றது; உடனே கதிரவன் முகிற்கூட்டத்தினிடையே மறைகின்ருன். சுவரிலிருந்த ஒளி மங்குகின்றது. ஆஞல் கழிந்ததன் நினைவு, அக்குழந்தையின் மனதில் ஒளியோடு திகழ்கின்றது; அவ்வொளியின்நினைவும் அதன்கருத்தைக் கவர்கிறது. அந்நினைவோடு, எதிரே மங்கலாய்த்தோன்றும் சுவரும் புலனுகின்றது. கழிந்ததன் நினைவும் நிகழ்வதன் புலனும் ஒன்ருக நிகழ்ந்து இறந்தகால வுணர்வை வளர்க்கின்றன. காலவுணர்வு எழுந்து வளர்வது இவ்வாறேயாம்.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[406-வது பக்கத் தொடர்ச்சி]

காமா:—(திடுக்கிட்டு) இன்னும் போகவில்லையா நீ? இந்நிமிஷமோ மறுநிமிஷமோ என்று காத்துக் காத்து உன் வரவு நோக்கிக் கண்பூத்தேன்.

[உருமபிள்ளை மோட்டார் லாயத்திலிருந்து வருகிருன்]

உரு :—(தயங்கிக் கொண்டே) ... உ - உம்...(கண்ணைத் துடைத்துக்கொண்டு தலையைச் சொரிகிருன்)

காமா :—தூங்கப் போய்விட்டாயா ?

தியா :—அல்லது குடிவெறியோ ?

உரு:-(கோவமாய்)எத்தனைபுட்டிநீவிற்ருயோஎனக்கு? மோட்டாரைச் சிறிதுசிறிது பழுதுபார்த்துக்கொண்டிருந்தேன்; சத்தம் கேட்கவில்லையா இங்கே?

காமா: —ஐயரோ ஊரிலில்லை, பழுதுபார்க்க இப்பொழுது என்ன அவசரம்? இன்னும் பத்துப் பதினைந்து நாளுக்கு வரமாட்டாரே.

தியா: —பொய் என்று எண்ணினேன்-மெய்தானே! அல்லது, நான் புறப்படுகிறேன்! (பெட்டிக்கருகே செல்ல)

உரு: —நான் குடிக்கவில்லை என்று இப்பொழுதேனும் தெரிந்ததா—(காமாக்ஷியிடம்) நன்ருகச் சொன்னீரம்மா—ஒரு நொடி பொறுக்குமா என் கைகள்—உடனுக்குடன் மோட்டாரைச் சீர்செய்து வைக்காவிட்டால்! இப்பொழுதென்ன அதனுல்?—நேரம் ஆகவில்லை...சாமியாரை அழைத்துவருகிறேன்......

காமா: —(தன் உதடுமேல் விரலைப்பொத்தி) மெள்ளப் பேசு; அவனுக்குத் தெரியக்கூடாது!

உரு: —யார் அவன் ? — சரி—அப்படியே! நாம் பேசுவதைக் கவனிக்கவில்லை—அவரை அவசரமாய்க் கொண்டுவரவும் முடியும்; மேலும் நிரம்ப மரியாதையும் செய்ததுபோலுமாகும்--மோட்டாரைக் கொண்டு போகிறேனே சாமியாரை அழைத்துவர!

காமா: —மெள்ளப் பேசடா! அவனுக்குக் கேட்டுவிட்டதுபார்; எதோ, யோசிக்கிருன் பார்!......

உரு: —(உரக்க) சரி — கொண்டுபோகட்டுமா? (மோட்டார் லாயத்திற்குப் போகிருன்)

காமா :-உற்றுப்பார், யாராகிலும் எதிரே வருகிருரோ!

தியா :—யாரோ, அங்கு, ஒருவன் விழுந்த அரவம் கேட்டது! மோட்டாரிஞல் மோட்டார் நிற்கலாம் போய்ப்பார்க்கிறேன்.

[இடப்புறம் விரைந்து மறைகிருன்]

காமா:—இந்தக் குஞ்சு எங்குப் பறந்ததோ — போய்ப் பிடிக்கவேண்டுமே — சாமியார் வரும்போது கூண்டில் அடைந்திருக்கவேண்டும் அது. (தாழ்வாரத்திலிருந்து இறங்குகையில்) குஞ்சு! குஞ்சு!!

[வலப்புறத்திலிருந்து ராஜீயா கையில் குழந்தையுடன் மெல்ல வருகிருள்.]

ராஜீ:—நான் வந்தது உங்களுக்குச் சந்தோஷம்—அவளுக்கு வருத்தம், போய் ஒளிந்துகொண்டாள்! குஞ்சு! நான் போய்விடட்டுமா?

காமா:—எனக்குச் சந்தோஷமா? சந்தோஷமாய் நான் பேசும் பேச்சைக் கேட்கிருயா சற்று? இங்கே கால்வைக்கக்கூடாது துலுக்கச்சி நீ என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்—காற்சிருயும் கட்டையும் பெண்களுக்கு நிரம்ப அழகு போ. நல்லவேளை, காற்றுத் தெற்கிலிருந்து அடிக்கிறதே, எங்கள் வீட்டிலிருந்து உங்கள் வீட்டுக்கு!—உங்கள் நாற்றம் இங்கு வீசுவதில்லை!

ராஜீ:—பின், நீங்கள் குஞ்சுவைப் படுத்திவைக்கும் கொடுமை முழுதும் எங்களுக்குக் கேட்கவேண்டாமோ! நாங்கள் இரவுமுடியத் தூங்கக்கூடாதென்கிற இந்தக் காற்றுக்கு ஈர இரக்கமுண்டோ!

காமா:-நீங்கள் தூங்கிஞலென்ன, ஏங்கிஞலென்ன —நான் பாப்பாத்தி நீ இங்கு வரவேண்டாம்! போ! போ!—மாயாண்டி! குடத்தில் நீர் கொண்டாடா! இவள் நின்ற இடத்தையெல்லாம் தேய்த்துக் கழுவு, வா.

ராஜீ:—சரி—நான் போகிறேன்—இங்குவந்த சாயப்பு எங்கே?—அவரைக் காணவந்தேன்!

காமா:--சாகிப்புக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

ராஜீ:—சொல்லட்டுமா ?... (சிரிக்கிருள்.)

காமா :—சொல்!

ராஜீ :—பின்ஞல் சொல்கிறேன்—முன்னே உங்கள் கொலுவைக் காட்டுங்கள்!

காமா :—திருடிப்போகவா ?—போ, போ !—நல்ல தந்திரம் அகப்பட்டது உனக்கு இங்குக் கால்வைக்க-போடா !

ராஜீ :—குழந்தையை ஏன் மிரட்டுகிறீர்கள் ?

காமா :—உன்னைத்தான் போடா என்றேன்—காற்சிருய் மாட்டிக்கொண்டால் ஆண்பிள்ளைதானேநீ?

ராஜீ:—நீங்களும் ஒருவகையில் ஆண்தான்!—வந்தவர் எங்கே ? மூட்டைகள் இங்கிருக்கின்றன!

காமா :—அந்தப்பக்கம் போஞர்—போய்ப்பார் !

ராஜீ :—அப்பா அவரை அழைத்துவரச் சொன்ஞர்—அழைக்கவந்தேன்—(இடப்புறம் புறப்பட)

காமா :—அவனைப் போய்த் தேடு வெளியே—பங்களாக்குள் வழி இது. ஊருக்கெல்லாம் இதுவா பாதை?

ராஜீ:—(கொலுஅறையைக் குழந்தைக்குக் காட்டி) அதோ பொம்மைகள் !

காமா :—போ, போ! (கொலுஅறைக்குள் சென்று கதவை மூடிக்கொள்கிருள்.)

ராஜீ: —(பின்புறம் திரும்பிப் பாராமல் வலப்புறம் செல்கையில்) இனி இங்கு வருவதில்லை. அப்பாவைப் பத்து குட்டுக் குட்டுகிறேன் பார் (ஓடுகிருள்)

ஒருகுரல்: —ஜாக்கிரதை! அம்மாடி! நல்லவேளை என் முழங்கை இடிக்கவில்லையே!

ராஜீ: —நீங்கள் வருவதைப் பார்க்கவில்லை நான்!

[சுபத்திரை வலப்புறத்திலிருந்து தோன்றுகிருள்]

சுப:—நானும் வேறெங்கேயோ பார்த்திருந்தேன்—நல்லவேளை (சிரித்துக் கொண்டு) காயம்படவில்லையே! என்னிடம் வருகிறேன் என்கிறதா குழந்தை? (குழந்தையை வாங்கிக் கொண்டு) இந்த ரோஜாப்பூவுக்கும் அந்த ரோஜாவுக்கும் எத்தனை வேற்றுமை? பிறந்தால் குழந்தை இப்படியன்ருே பிறக்கவேண்டும்.

ராஜீ: —உங்கள்மகன் கறுப்பாயிருக்கிருஞ? வெள்ளையாயிருக்கிருஞ ?

சுப: —என்ன...என்ன ?

ராஜீ: —சிவப்பாய்த்தானே யிருக்கிருன் !

சுப: —ஆம்! ஆம்!......வீட்டில் இருந்தாளே ஒரு பாட்டி யிப்போ—எங்கே காணும் ?

ராஜீ: —உள்ளே மறைந்துவிட்டாள் !

சுப:—இதே நல்ல சமயம் (கையிலிருக்கும் குழந்தையைக் கொடுத்துக்கொண்டே) இந்தாம்மா! கண்களில் ஏதோ தூசி விழுந்துவிட்டது துடைத்துக்கொள்கிறேன்.

ராஜீ :—(வாங்கிக்கொண்டு)நான் ஊதட்டுமா ?

சுப :—(முகத்தை மறைத்துக்கொண்டு) ஊதிஞல் இன்னும் கேடு—நானே துடைத்துக் கொள்கிறேன் !

ராஜீ :—அங்கே யிருக்கிருர் அவர் ? இதோ வந்து விட்டேன்—(வலப்புறம் மறைகிருள்)

சுப : —நல்லவேளை — சிறுபெண், உண்மையை அறியவில்லை ; உள்ளேபோகலாம்,...நலத்திற்கேதான் வந்தது இப்போது இவ் அழுகையும்—துக்கம்கேட்பதெப்படி என்று மயங்கிக் கூசி யிருந்தேன்—என் அழுகைமுகத்தைப் பார்த்தாலே போதும்; காமுப்பாட்டி ஊகித்துவிடுவள் !....ஐயையோ—புருஷர் இங்கு யாவரேனும் இருக்கிருரோ—(இடப்புறம் விரைகிருள்.

[குஞ்சு, வலப்புற அறையிலிருந்து ஓடிவருகிருள்]

குஞ் :— அம்மா, எங்கே போகிருய் ?—(பின்புறமாய் வந்து சுபத்திரை இடுப்பைக் கட்டிக்கொண்டு) அம்மா! நில்லு !—

188920

சுப :—யார்—குஞ்சு ? வாம்மா ! வா (திரும்பிப் பார்த்துக் குனிந்து குழந்தையைக் கையில் எடுக்கையில்)

குஞ் :—நீயா—அம்மா ? பொய் ! (தலையில் ஒருஅடி அடித்து) அம்மா! எங்கே.....மூட்டைகளைத் திறக்கணும்—வாம்மா ! எங்கே போயிருக்கிருய் ? (உரக்கக் கூவிக்கொண்டே கீழிறங்கி இடப்புறம் மறைகிருள்.)

சுப:-(கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக்கிக்கொண்டு) பாவம்! இந்தத் துக்கத்தை யார் தாங்குவார்!-ச்சீ! இதென்ன-பிறக்கிறது குழந்தை—இறக்கிருள் தாய்-குழந்தை தவிக்கிறது! கலியாணமாம் மணமாம்—நாற்றம்! நாத்தமே! மூக்கையும் தொண்டையையும் அடைக்கிறது. அம்மா என்று என்னை நினைத்து வந்ததே, பாவம், பாழும் எனது புடவைக்கட்டு (அழுது கொண்டே மறைகையில்)

[மாயாண்டி இடப்புறத்திலிருந்து வருகின்ருன்]

மாயா:—அம்மா! அம்மா!

சுப:—என்னையா கூப்பிடுகிறாய்?

மாயா:—ஆமம்மா—உங்களை மோட்டாரில் ஏற்றிக்கொண்டு போகச் சொல்கிறீர்களா, அம்மாவிடம்?

சுப:—இப்போதுதான் இறங்கினாயே—விழுந்து சாகத் தெரிந்தாயே!

மாயா:—நிறுத்தமாட்டேன் என்றார் துரை.

சுப:—துரையினுடைய வண்டியா அது?

மாயா:—மோட்டா ரோட்டியைச் சொல்கிறேன்—என்ன கெஞ்சினேன் அவரை—முடுக்கிக்கொண்டு போய்விட்டார்!

சுப:—பின்னால் நீ தொத்திக்கொண்டே போகவா, நல்லகாரியம் செய்தாய்?

மாயா:—பின்புறம் தொத்தினால் என்ன—வால் மாதிரி ஒன்றுமில்லையே—பின்காலால் உதைத்துவிடுமா மோட்டார்—வாலா லடிக்குமோ?

சுப:—காலேது வாலேது?

மாயா:—கழுதை உதைக்கிறாப்போலே--மோட்டார் எப்படி ஓடுகிறது என்று சொல்லுங்கள்?—உங்களுக்குத் தெரியுமோ?

சுப:—அதெல்லாம் நானறியேன், கவண்டா!

மாயா:—என்னைப்போல்தான்! பட்டிக்காட்டாள் நீங்களும்! நான் ரயிலாகிலும் பார்த்திருக்கேன், அது கூட நீங்கள் பார்த்ததில்லையே!

சுப:—நான் பார்க்கவில்லை என்று எப்படித் தெரிந்தது உனக்கு? (சிரிக்கிறாள்) நான் மயில் பார்த்திருக்கிறேனே!

மாயா:—மயிலல்ல—ரயில்—ரயில்! ரயில்—

சுப:—ரயில் என்று நான் கேட்டதில்லையே!

மாயா:—காட்டட்டுமா நான். வாருங்கள் மச்சுக்கு ஏறுவோம்!

சுப:—ரயிலை அங்கே வைத்திருக்கிறாயா? பையிலிருந்து இங்கேயே எடுத்துக் காட்டேன். நான் பாட்டியைப்போய்ப் பார்க்கவேண்டும்.

மாயா:—ஓஹோ! ரயில், எனது சட்டைப்பைக்குள்ளா? நல்ல பட்டிக்காட்டும்மா நீங்கள். வாருங்கள்; படி ஏறுங்கள்!

சுப: —காமுப்பாட்டியைப் பார்த்தபிறகு!

மாயா: —அம்மாள், மச்சில்தானே இருக்கிறார்கள்—அவர்களையும் பார்க்கலாம், ரயிலையும் பார்க்கலாம்!

சுப:—மச்சிலா? சரி—போவோம்...வா? (ஏறுகிறார்கள்.)

மாயா: —(ஏறிக்கொண்டே கூடவரும் சுபத்திரையிடம்) உங்கள்மேல் பாய்ந்துவிடும் என்று பபப்படவேண்டாம்—அது தூரத்தானிருக்கும்—ஆயிரம் மைலுக்கப்பால்—நம்மிடம் வராது!

சுப: —ஆயிரம் மைலுக்கப்பாலா? மச்சில் இருக்கிறது என்றாய்! (சிரிக்கிறாள்) என்னை ஏமாற்றவா இப்படி நீ—கவண்டா, நல்லவன் நீ?......

மாயா: —நான் பொய்யா சொல்கிறேன்...அதோ—அதுதான்...ரயில்!

சுப: —எது? எங்கே!

மாயா: —அது—அதோ! அங்கே!

சுப: —அது? எங்கேயடா—அந்த வீடா? அந்த மேகமா? அந்த மரமா—அந்த மலையா — அந்தக் குளமா? எது எது? மலைக்குப் பர்வதம் என்று வேறொருபெயர் இருப்பதுபோலக் குளத்துக்குப் பெயரா ரயில்?

மாயா: —சீச்சீ! குளத்துநீரையெல்லாம் குடித்துவிடுமே அது—குளமல்ல!

சுப: —மேகமா—மேகம் குளத்தைக் குடிக்கிறது! —பாட்டில் வருகிறது—கடல் நீரைக் குடித்து.... ...

மாயா :—மேகம் நீரைக்குடிக்குமோ, நீரைக்கொட்டுமோ?......மேகங்கூடத் தெரியாதா உங்களுக்கு? இதோ—இவைகள் தான்!

சுப :—ஐயையோ—இவைகள் எல்லாம் பஞ்சுப் பொதிகளல்லவா?

மாயா :—ஆனால் மேகமல்லவோ?

சுப :—நீயே பார்—நீ பருத்தி பயிர்செய்ததே இல்லையா—பருத்தியே பார்த்ததில்லை?

மாயா :—ஆமாம்—இது பருத்திதான். காற்றடித்துக்கொண்டு போகிறது. வயல்களிலிருந்து சுழற்றிச் சுருட்டிக்கொண்டு! பாவம் குடியானவர்கள் வாயில் மண்தான்.

சுப :—அப்படிச் சொல்லாதே—காந்தி ஏவிவிட்டிருக்கிறார் காற்றை, இப்படித் தூக்கிச் செல்ல!—எளிதாக!

மாயா :—வெள்ளைக்காரனுகத்தா னிருக்கும்!—அதோ, அங்கிருக்காமே—ஒரு பஞ்சாலை!—புகைபோக்கி தெரிகிறதே அங்கே—பருத்தியை நூற்று நெய்துவிடுகிறார்களாமே! அங்கேயா...காற்றுக்கூட வெள்ளைக்கார ரிட்டவேலையைச் செய்கிறது.

சுப :—நான் காந்தியின் தந்திரம் என்கிறேன், நீ வெள்ளைக்காரரைப் புகழ்கிறாயா?

மாயா :—காந்திசாமி மகாத்மாதான், தெரியும் எனக்கு—ஆனால் வெள்ளைக்காரனை வெல்ல முடியவில்லையே—ரயிலைப்போய்க் காட்டிலிருந்து பிடித்து வந்து, மூக்கணாங் கயிறு கட்டி 20 வண்டி 27 வண்டி பூட்டி இழுக்கவைக்கிறானே!

சுப:—அப்படியா? ரயில் ஒரு மிருகமா?

மாயா:—அதோ அங்கே, தெரிகிறதே கறுப்பாக, எறும்புபோல ஊர்ந்துகொண்டு - பார்க்கச் சின்னதாயிருக்கிறது. நூறுமைல் தூரத்திலிருப்பதால்—கிட்டப்போய்ப் பார்த்தால், ரொம்ப பயங்கரம்.

சுப:—நூறுமைலா—சரிதான்! கிட்டே சென்றால் பயங்கரமாய்த்தா னிருக்கும்!

மாயா:—சாமி சொன்னார், அது மிருகம் என்று, நான் நம்பவில்லை. வாய், மூக்கு, காது, தெரியவில்லை... கண் இரண்டு சிவப்பாய்த் தெரிகிறது—மூக்கிலேயே கண்களும். வாய் பின்புறம் வைத்திருக்கிறது. எவ்வளவு பெரிது, ஓட்டுகிறவன் அங்கே நிற்கிறான். வாயைத் திறந்தால்-செக்கச்செவேல் என்று நெருப்பு-சிலவேளை ஓட்டுகிறவர்களையே நறுக்கெனக் கடித்து விழுங்கிச் செரித்துவிடுமாம்!

சுப:—அங்கே போகிறதே—சிவப்பாக, அதுவா?

மாயா:—கறுப்பு கறுப்பு-முன்னாலே மற்றவைகளை இழுத்துக்கொண்டு போகிறதே, தெரியவில்லை?

சுப—:தெரிந்தது.

மாயா:—இந்தக் காட்டுமிருகத்தை எப்படியோ பிடித்து அடக்கிப்பழக்கிவிட்டானே! அவன் சக்தியே சக்தி.

சுப் :—யார் சக்தி?

மாயா :—இந்தவெள்ளைக்காரன்தான்!...நான் வண்டியில் உட்கார்ந்திருக்கிறேன்—காட்டிலே மேட்டிலே அடித்துத் தள்ளிவிட்டால் என்ன செய்வது என்று நடுநடுங்கிக்கொண்டு ......ஜன்னல் வழியாய்ப் பார்த்தேன். பார்த்தாலோ, மரங்களும் குளங்களும் வீடுகளும் தோப்புகளும் தடதடென ஓடி, வழிபிரிந்து, ரயில்வண்டிக்குப் பாதைவிட்டா விலகுவது!—மரம் எங்கேயாகட்டும் நகர்ந்ததுண்டா? வெள்ளைக்காரனுக்குப் பயந்து இடம்விட்டு இடம் மாறுகிறதே! நம்ம் தோட்டங்களிலே, நட்ட மரம் பட்டுவிழும் வரையில் அதேயிடந்தான்—மரங்களையும் நகர்த்த முடியுமானால் என் ஒரு நிலத்தை என்ன செய்துவிடுவேன் தெரியுமா!

சுப :—ஒரு வெள்ளைக்காரனைக் கூட்டிக்கொண்டு போ உன் ஊருக்கு!

மாயா :—இந்த மாயாண்டி பேச்சுக்கா? வேண்டாமம்மா—என்னைக் கொலையும் செய்துவிடுவான்—அவன் மூளையைக்கண்டு பயமாயிருக்கிறது—ரயிலை எவ்வளவு நன்றாய்ப் பழக்கியிருக்கிறான்—எல்லாருங் காத்திருக்கு மிடத்தில், அவர்களை ஏற்றிக்கொண்டு போக நேரே வந்துநிற்கிறதே.

சுப :—நிற்காமலும் போவதில்லையா? (சிரிக்கிறாள்) எல்லோரையும் சாகடிக்க.

மாயா:—ஆமாம்மா! பார்த்தேன்—சில வேளைகளில் நிற்பதில்லை. முரட்டுவேகமாய் ஓடுகிறது—மிருகந்தானே, புத்தி ஏது?

சுப:—அப்படிச் சொல்லு-காந்தி சொல்வதுபோல்.

மாயா: —புத்தி குறைவில்லை—ஓட்டுகிறவன் நிறுத்தாவிட்டால்... ஜனங்களுக்கு ஏற இடமில்லை என்று நிறுத்தாமல் ஓட்டி முடுக்குவான்.

சுப: —கூட்டம் அடைந்து அடைந்து குவிந்து புளிமூட்டையாய்ப் பிரயாணிகள் வேர்த்துக் கொட்டும்போது இன்னும் புளிமூட்டைகளை அடுக்கிக் கொள்ள நிற்பானேன்? புத்திசாலித்தனந்தான்!

மாயா:—அப்படி என்றால்—நீங்களும் ரயிலில் ஏறியிருக்கிறீர்களா?

சுப: —(சிரித்து) நான் பார்க்கவேயில்லைஎன்று நீயே சொன்னாய்; இப்போது, இப்படிக் கேட்கிறாயே?

மாயா: —புளி மூட்டை என்றால் தெரியாதா? இத்தனை நேரம் என்னை வீணாக இங்கே நிற்கச் செய்தது எதற்கு? அம்மா, என்னைச் சோம்பேறி என்று திட்டவா.

சுப: —எங்கே பாட்டி,—போவோம், வா.

மாயா: —ஆனால், அது என்ன தீனி தின்கிறது தெரியுமா?

சுப: —புல்தானே...அல்லது ஆடுமாடோ?

மாயா: —சாதம்—குழம்பு—சோறு, கிடையாது.

சுப: —சமைத்துப் போடவேண்டுமா?

மாயா:—ஆம் அப்படித்தான்....

சுப:—நல்லவேளை அதையேனும் சரியாய்ச் சொன்னேனே!

மாயா:—ஆம் சரியாய் வதக்கிச் சமைக்கவேண்டுமாம்-ஒரு வண்டிநிறைய ஒவ்வொரு கரியும்........

சுப:—கரியா? கரியா?

மாயா:—ஆம் கரிதான்! எவ்வளவு பெரிது? என்ன காயோ—தேங்காய் அளவு பெரிது—பேர் என்னமோ தெரியவில்லை—கறுகறெனத் தீந்துபோம்படி,நெய்யும் எண்ணெயும் கொட்டிக் கொட்டி வதக்கி வாரி வாரி வாயிலேகொட்டுகிறார்கள் கூடைகூடையாய்...

சுப:—நீ தின்று ருசிபார்த்தாயோ?

மாயா:—பார்க்கவேணும் என்று ஆசை! ரயில் என் மேல்சீறிவிட்டால் என்னசெய்வது என்று பயந்தேன்.

சுப:—கீழே வா தருகிறேன்.

மாயா:—இப்பொழுதேயா? யார் யார்—சமைத்து வைத்திருக்கிறார்கள்?

சுப:—அதோ, அவர் வருகிறார்...பேசாதே...நாம் போவோம். பின்புறப் படிகள்வழியாய் இறங்குகிறேன் நான், நீ........(மச்சில் மறைகிறாள்)

மாயா:—நான் கொட்டத்துக்கு வருகிறேன் கொஞ்சம் அதிகமாகவே கொண்டுவாருங்கள்—ரொம்பப் பசி எனக்கு (மச்சிலிருந்து இறங்கிக்கொண்டே) மிருகம் தின்கிறது, எனக்கில்லையா? சோம்பேறியாம் நான்! தீனிபோட்டால்,நானும்ரயிலாய் உழைக்கமாட்டேனா? சொல்லுகிறேன் கிழவியிடம்! இந்தத் துலுக்கன் இன்னும் என்னை வைவான். அப்படியே போய்வருகிறேன். [மீண்டும் மச்சுப்படி ஏறுகையில்]

[வலப்புறத்திலிருந்து தியாகுகையில் குழந்தையுடன் வருகிறான்]

தியா: —கவண்டா? வந்தாயே, ஏன் திரும்பி ஓடுகிறாய் மாடிக்கு—வா இங்கே!

மாயா: —அம்மா கூப்பிட்டார்கள்—போகவேண்டும்.

தியா: —யார்—அந்த அம்மாவா?

மாயா: —ஆமாம்! (கீழிறங்கி)

தியா: —என்ன உறவு அவள், ஐயருக்கு? சரி—யாராயிருந்தால் என்ன! என்னவோ கேட்கவந்தேனே-அடடா மறந்துவிட்டேனே.

மாயா: —சரி—நான் போகட்டுமா—பசிக்கிறது.

தியா:—பசியால்தான் மூர்ச்சையாய் விழுந்துவிட்டாய் மோட்டாரிலிருந்து—அல்லவா?

மாயா: —ஆமாம்!

தியா: —பொய்—இனி மோட்டாரிடம்போ, சொல்கிறேன்—கொன்றுவிடும் உன்னை—! செத்திருந்தால் உன் குஞ்சுகுட்டிகள் என்ன செய்யும்,—உன் கடனையெல்லாம்...ஆமாம்!—உனக்கு எவ்வளவு கடனிருக்கிறது.?

மாயா:—எனக்கெப்படித் தெரியும்...செட்டியாருக்குத்தான் தெரியும்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[416-வது பக்கத் தொடர்ச்சி]

மூலமே மறந்த தேன்றால்
முனிவனுக் கிழுக்குண் டாமோ !

இதுதான் நாடகக் காவியத்தின் அழகு. புனைந்துரை சில தாம் தம் பாத்திரங்களைப் புகலவைக்கின்ற நினைவுபோக்கி மெல்லமெல்லத் தாமே அப் பாத்திரங்களின் நிலைமைக்கேற்ற தன்மையை உத்தம மனோபாவமுடையகவிகள் ஆங்காங்குஏற்றுக்கொண்டு விடுகின்றனர். தன்னுடைய கல்வி அநுபவம் விருப்பு வெறுப்புக்கள் குற்றங்குணங்கள் முதலியவைகளைப் பாத்திரங்களுக்குள் புகட்டித் தான் கிழித்தகோடு கடவாமல் அவைகள் ஆடும்படி செய்து முடித்த ஒரு கவியின் நாடகம் மிக்க தரமுடைய நாடகம் என்று மொழிவதற்கில்லை. ஆட்டுவிப்போன் கட்டளைக்கு மப்பாலாகித் தாமே தம்வயத்தவாய் விவகரிக்கப் புகுவதைக் கலைத்திறஞ் செறிந்த கவிகளால் கற்பனை செய்யப்பெற்ற பாத்திரங்களிற் காண்கின்றோம். திருவிற்றரு போகபௌவத்தில் தயரதன் தோய்ந்தே கடந்தான் எனக் கம்பர் கருதினாரானாலும், தயரதனே தன்னிலையைத் தெரிவித்தபோது, நெடிதுநாளுண்ட எச்சிலை நுகர்வதுபோன்றே அத்திருவின் நலங்களை நாணினனென்றும், தனியரசாட்சியில் தாழும் தன் உள்ளம் ஒரு நாளும் இனியதுபோலும் அவ்வரசை எண்ணியதில்லை யென்றும் விளம்பிக் கம்பர் கட்டளையைத் தான் முரணிநின்ற கொள்கையைக் காட்டினான். "ஏ, கம்ப, நீ என்னைத் திருவில்தொடர் போகபௌவத்தில் அழுத்தினாய்—ஆயினும் தாமரை இலையென யான் அதனோடு ஒட்டாது தீர்ந்தேன் காண்'' என்று தயரதன் தடுத்துரைத்த வாசகமல்லால் அது வேறில்லை. வசிட்டமாமுனிவனும் கம்பர் தனக்கு வரையறுத்துவைத்த எல்லையை இங்குச் சற்றே கடக்க நேர்கின்றது.

மும்மையுமுணர்ந்த முனிவரன் வசிட்டனுக்கு, நிகழ்கின்றவைகளின் நிச்சயம் யாவுந் தெரியும். இராகவன் கானகஞ் செல்லவேண்டுமென்பது ஒருதலையாதலால் அதற்குக் கருவியாய கைகேயி தன் மனத்தினை மாற்றலொண்ணாதென்பதுந் திண்ணம். மன்னுயிர்க் குறுவதே செய்துவைகிய மன்னவன் அத்தனிப் பெருங் கொள்கைக்கு மாறாக இன்று "தன்னுயிர்க் குறுவதுஞ் செய்யவெண்ணிய வகையில் தாழ்ந்து இராமனுக்கு முடிசூட்டமுனைந்ததும், இராமனே தன் மகனென்றும் கோசலையின் மகன் பரதனென்றும் நிச்சயத்திருந்த கைகேசி தூய்மை சான்றவப் பொய்யினின்று பிறழ்ந்து வன்பழிக்கிடமாய மெய்ம்முறை உணர்ந்தவளாய் மனந்திரிந்ததும்,

மசரத மணையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளால் நீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்

தசரதன் மதலையாய்த் தாரணிவந்து தோன்றிய தனிப் பெரும் பொருளின் திருவுளத்தின் வண்ணம் நிகழ்கின்றன வென்றறிந்த அந்தத்

தேவரு முனிவரு முணருந் தேவர்கள்
மூவரி னால்வனும்

வசிட்டமுனிவன், இராமன் நடிப்பது நாடகமென்றும் அந்நாடகத்தில் தானுமோர் வேடதாரி என்பதும் தேர்ந்திருந்தபான்மையில், இது நாடகமென்பதும் அந்நாடகத்தில் தான் பூண்டுள்ளவேடமும் வெளியாகாமல் காப்பதற்கு எவ்வளவு இயம்பவேண்டுமோ அவ்வளவே இயம்பியக் கைகேசியின் செயலைத் தவிர்ப்பான்போல் முயன்றானென்பதும்,

இனியுன் புதல்வற் கரசு
மேனை யோர்க்கின் னுயிரு
மனுவின் வழிநின் கணவற்
குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே
புனையாய் பொன்னே

என்றவக் கனிந்தமொழிகளின் மென்மையால் தென்படுகின்றன. கம்பர் கட்டிவைத்த நாடகத்திற்கு ஏற்றவாறு நவின்று நடிக்கவேண்டும் என்ற கட்டளைக்குள் அடங்கியது இது. கைகேசி, அம்மொழிக் கிணங்காது மறுத்தபிறகும்,

கொழுநன் றுஞ்சும் மெனவும்
கொள்ளா துலகம் மெனவும்
பழிநின் றுயரும் மெனவும்
பாவம் முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன்
றுணர்கின் றிலையா னினிமேன்
மொழிகின் றனவென் னென்னா
முனியும் முறையன் றென்பான்

[அவ்வசிட்டமுனிவன், "கணவன் சாவான் என்றும், உலகத்தார் இதனை ஏற்றுக்கொள்ளாரென்றும், உன் பழியே நாளுக்குநாள் வளரும் என்றும், இதனில் பாவம் உண்டு என்றும் கருதி நீ இக்காரியத்தை ஒழியமாட்டாய். இதனில் உள்ள இரகசியம் ஒன்றையும் நீ அறியாய். ஆதலின் இதன்மேல் நானுனக்கு உரைப்பதற்கு யாதுளது.'' என்று பின்னர், "எனினும், இது உனக்கு முறையன்று என்பதொன்றைமட்டும் இயம்புவேன்'' என்றான்.]

"கைகேயி, நீ கற்பும் மற்றைய மாண்புடைய குணநலங்களுங் கூடியவள். ஆயினும், இப்பொழுது நீ பழியும் பாவமும் பாராய். உனக்கிது முறையன்று என்பதொன்றன்றி, திருவுளத்தின் கருத்து கைவருதற்கு ஓர் கருவியாய் நீ அமைந்திருக்குமாறு அறிந்திருக்கின்ற நான் உன்னை வெறுக்கலாமோ'' என்னக் கழறியதும் கம்பரே கற்பித்திருந்த பாடத்தை ஒப்புவித்ததாகும். எனினும் இப்படி இயம்பிவந்த முனிவனது மனத்தினை இரண்டு விடயங்கள் தைத்தன. மற்றவனைக் கெடுப்பானொருவன் தன்னுடைய வன்மையால் தீதிழைப்பதனினும் அவனுடைய மென்மையைக் கொண்டே அழிவிப்பது மிகக்கொடியது. விலங்குகளையும் புள்ளினங்களையும் வெஞ்சரங்கள் தொடுத்தெய்து கொல்கின்ற வேடர்களது தீமையைக்கண்டு பொறுக்கலாமெனினும், நல்லிசையை நயக்கின்ற அசுணமாக்களை அவ்விசையினாலேயே கொணர்வித்துப் பின் பறைகொட்டிக் கொல்கின்ற கொடுமையைக் கேட்போர் நெஞ்சம் இரக்கத்தால் நெகிழ்ந்து இரு

பிளவாகும். கைகேசியும், "யான் வாங்கிய வரன்களின் பயனை ஏன் துய்த்தலாகாது. எற்றுக் கதனை யான் இப்பொழுது மாற்றவேண்டும். கூறுவது கூறுக முனிவ, யான் கைக்கொண்ட ஊதியத்தைத் துறக்க மாட்டேன்'' என்றிருப்பாளாயின் அதனை வசிட்டமுனிவன், இந்நாடகத்திற்கு இவள்நிலை இவ்வாறு இருக்கவேண்டுமென்பது தக்கதே எனப் பொறுத்திருப்பான். அவளோ, "அரசன் மெய்யின் திரிவான் என்னின் இம்மாவுலகத் துயிரோடு இனி வாழ்வு உகவேன்'' என்றது, வேண்டாவழிக்கொடுமை மிகத் தாங்கியதோர் வாசகமாக மெல்லமெல்ல அம்முனிவனுக்குப் புலப்படத் தலைப்பட்டது. இதுவும், "என்னே மன்னா யாருளர் வாய்மைக்கு இனி'' என்றிவள் முன் இயம்பியதும் ஒருபடி. அசுணமாவை அதன் இசைநலத்தைக்கொண்டே அழிவித்துக் கொள்ளும்படி செய்விப்பதுபோல், தயரதனை அவனுடைய வாய்மைவிருதத்தைக் கொண்டே அழிவிக்கின்றாள். இதுவும் இதனால் கணவனுயிரைக் கொலை காண்கின்றாள் என்பதுவும் உறுத்தப்பெற்ற மனத்தினால் அம்முனிவன், எல்லாம் சங்கேதப்படி நடக்கின்றதென்பதையும் சற்றே அயர்ந்து, புனைந்த வேடத்துள் நினையாத சீற்றம் நிமிர்வதாகி,

கண்ணோ டாதே கணவ
னுயிரோ டிடர்கா ணாதே
புண்ணூ டோடுங் கனலோ
விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயாப்
பேயோ கொடியாய் நீயிம்
மண்ணோ டுன்னோ டென்னாம்
வசையோ வலிதே யென்றான்

[தாக்ஷண்யமில்லாமலும், கணவனது உயிர் நீங்கும் என்னுந் துன்பத்தை நினையாமலும், புண்ணிற்குள் பாயும் நெருப்போ விஷமோ என்று பேசுகின்றாயே, நீ ஒரு பெண்ணோ, அல்லது நெருப்போ, அல்லது மறையாமல் எதிர்நின்று உயிர்குடிக்கும் ஒரு பேயோ! கொடியவளே, நீயும் நீ பெற்ற இம்மண்ணுமாய்ச் சேர்ந்து என்ன ஆகப் போகின்றீர்கள். பழிதான் உனக்கு வலியதாகப்போகின்றது—என்றான்]

வாயான் மன்னன் மகனை
வனமே கென்னா முன்னம்
நீயோ சொன்னா யவனோ
நிமிர்கா னிடைவெந் நெறியிற்
போயோ புகலோ தவிரான்
புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோய் நின்போற் றீயா
ருளரோ செயலென் னென்றான்.

[வனத்திற்குச்செல் என்று மன்னவன் தன் வாயாற் சொல்லாமுன்னம் மகனைப் போவென்று நீயோ சொன்னாய்—அவ்விராமனோ, உயர்ந்த காட்டின் கொடிய வழியில் போய்ச் சேர்வதையோ தவிர்க்கமாட்டான். கணவன் உயிரையும் உன் புகழையும் ஒருங்கே பொசுக்குகின்ற நெருப்புப் போன்றவளே, உன்னைப்போல் கொடியவர் வேறு இருக்கின்றாரோ ! இதன்மேல் செய்வதற்கு என்ன இருக்கின்றது—என்றான்.]

பிரகலாத நாடகமொன்றில் நரசிம்மவேடமெடுத்தவன் இரணிய வேடந்தரித்தவனை மெய்யாகக் கிழிப்பது போலாம் இது. ஒப்பிற்குக் கைகேசியைத் தடுக்கவந்த அந்தத் தவவான், தன்னையுந் தாங்க மாட்டாமல் இவ்வண்ணம் வைது கழறினான். தயரதன் உயிர்நிலை தளர்ந்து வாடிக்கிடப்பதும், கோசலை துன்பக்கோலமொடு துவண்டு சோர்வதும், கைகேசி கல்லெனக்கரையாது நிற்பதும், தன்னருமை இராமன் நிமிர்கானிடை வெந்நெறியிற் படரவேண்டுமென்பதும் யாவும் ஒன்றுகூடி வசிட்டமுனிவன் அறிவையும் அலைத்து அவன் இந்நிகழ்ச்சியின் கொடுமையைத் தாங்கமாட்டாதபடி செய்துவிட்டன. இப்படியே, இறப்பினோடு எதிர்வுமுணர்ந்த இம்முனிவன் பின்னரும் பரதனோடு கானிடை இராமனை நாடிக் கண்டநாள், அப்பரதன் வேண்டியதொன்றிற்கும் அசையாது வனம்நீங்கி வளநகர் நண்ண மறுத்து நின்ற இராகவனை நோக்கித் தந்தையினுந் தன் மேம்பாடுரைத்து,

இதவிய லியற்றிய குரவர் யாரினும்
மதவியல் களிற்றினாய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய வொருவனே யுயரு மென்பரால்

[மதம் பொருந்திய யானை போன்றவனே, இம்மை மறுமை என்னும் இரண்டு பதங்களிலும் நன்மை பயக்கும்படி குற்றமற்ற வித்தைகளைப் பண்பினோடு கற்பித்து உதவிய ஆசிரியன்தான், இதமானவைகளைச் செய்துவைக்கின்ற ஐம்பெருங்குரவர்களில் உயர்ந்தவன் என்று மேலோர் கூறுவார்—]

என்றலால் யானுனை யெடுத்து விஞ்சைகள்
ஒன்றலா தனபல வுதவிற் றுண்மையால்
அன்றென தின்றென தாணை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரிய நாடென்றான்

[என்று கூறுவதால், நான் உன்னை எடுத்து ஆதரித்து, பற்பல வித்தைகள் கற்றுக்கொடுத்திருப்பது உண்மையாகையால், ஐயனே, எனது ஆணையை மறுக்காமல், இன்றைக்கே நீ மீண்டுவந்து உனக்குரிய இராச்சியத்தை நன்றாகக் காக்கக்கடவாய்]

என்று தன் முறையும்தகவும் மறந்து குருவின் அதிகாரத்தைச் செலுத்தப் புகுந்ததும், இராமன்பாலுள்ள அபிமானத்தினால் அவன் நடிக்கும் நாடகத்திற்கு அடுக்காததை அறையலாகாத்தன்மையை அயர்ந்ததேயல்லால் வேறன்று. "ஈறில் நல்லறம் பார்த்திசைத்தேன், ஆதலின் இவ்வல்லரக்கி தாடகையைக் கொல்'' என்று முன் கோசிகமுனிவன் ஆணை யளித்தபோது, அதுகேட்டு

...அறனல்லவும்
எய்தி னாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றோ அறஞ் செய்யுமாறு

எனப் பணிவுடன் உடன்பட்ட இராகவன் இங்குக் குலகுரு என்ற பான்மையில் கோசிகனினும் உயர்ந்த பதவிவாய்ந்த வசிட்டனது ஆணை, அறமன்றாயினும் தனக்கதுவே வேதமெனக்கொண்டு செய்திலன். மற்று

சான்றவ ராகவன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்தரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ

[தேன்பொழிகின்ற தாமரையில் வீற்றிருக்கின்ற பிரமனது சிறுவனே, பெரியோர்களே ஆகட்டும், தன் குருமார்களே ஆகட்டும்; தன் தாய் முதலியவர்களே ஆகட்டும்; மெய்யான புத்திரர்களே ஆகட்டும்; ஒன்றினைச் செய்வேனென்று வாக்களித்து அக்காரியத்தை ஏற்றுக்கொண்டபின், அவ்வார்த்தையை மறுத்து நடக்கலாமோ]

எனச் சாதித்துவிட்டனன் இராமன். முன் கோசிகனுக்கு இணங்கவேண்டியதும் இங்கு வசிட்டனை மறுக்கவேண்டியதும் இராமன் மேற்கொண்ட நாடக நிகழ்ச்சிக்கு இன்றியமையாதனவாயின தன்மீதிருந்த அன்பினால் பொச்சாந்து இவ்வண்ணம் இயம்பிய வசிட்டமுனிவனைச் 'சிறவ' என்று ஒருவாறு பரிகசித்ததும் ஏற்புடைத்தே என்று எண்ணல் வேண்டும். மெய்யறி வசிட்டனுக்குத்தான் இது இழுக்கோவெனின் அதுவுமன்று. மன்னவன் மாயக்கண்டும் மைந்தனைக் கானகம்போக்குவான் நின்ற கைகேசியின் கொடுமையும், பரதனே அழுதழுது அழைக்கவும் வாராது அக்காட்டகத்தே நின்ற இராமன்தன் திண்மையும் நாடகமே எனக் காணவும் வசிட்டனுக்குப் பொறுக்கவில்லை. அங்குக் கைகேசியை வைதனன், இங்கு இராமனை வற்புறுத்தினன். இவ்வாறு வற்புறுத்துவது தக்கதன்றெனத் தகைந்த இராமன் செய்தியும்—நோக்குங்கால் இன்னதே. பிற்றைநாள் பிரம்மாத்திரத்தினால் மாய்ந்துகிடந்த தன்னருமைத்தம்பி இலக்குவனைத் தழுவி யழுதழுது அகங்கரைந்தனனே இராமன். வானரப்படைகளோடு இலக்குவன் மாய்ந்ததெல்லாம் மாயநாடகமென்றறியானோ அவன். இதனைக் காண்பதற்கு அயலில் யாவரும் இருந்திலராதலால், இப்புலம்பலனைத்தும் நாடகப் புலம்பலே என்று நவில்வதற்கில்லை. ஆயினும், இலக்குவன் மாண்டானென்றுதான் மெய்யாகவே அழுது புரண்டிரங்கியதற்குக் காரணம்,"பொருந்தேன் நான் இப் பொய்ப்பிறவிக்கும் பொறையல்லேன்" என்று இராமனே இயற்பட நன்கு எடுத்தியம்புகின்றனன். நாடகத் தலைவனுக்கே ஒன்று பொறுக்க இயலாதுபோயிற்றெனின், ஏனையோரும் சற்றே அயர்ந்து விட்டாற்றான் அமையாதோ! அன்னவா றயர்ந்ததாற்றான் வசிட்டனும் வன்சொல் சிலவழங்கிக் கைகேசியை வைய நேர்ந்தனன். இவ்வண்ணம் இவன் வைதபோது தன்னை ஆக்கிய கம்பர்தம் கைகடந்து தன்பொறுப்பிலே சில செப்பிவிட்ட இது நாடகப்பெருமைக்கு ஏற்றதோர் இலக்கணமாகும். செய்கையளவிலேனும் முனியும் முனியத்தக்க கொடியாளே கைகேசி.

இனித் தயரதன் தன்மையை நோக்குவோம். தன்பால் கொடியவரங்கள் இரண்டு கைக்கொண்டு நிற்கின்றாள் கைகேசி என்பது அறிவானேயன்றி, அவ்வதிகாரத்தை இராமன்வயின் அவள் செலுத்தியும் ஆய்விட்டதென்பது, "வாயான் மன்னவன் மகனை வனமே கென்று முன்னம், நீயோ சொன்னாய்' என்ற வசிட்டனது சொற்களாற்றான் தயரதனுக்குத் தெரிய வந்திருத்தல் வேண்டும். ஆதலின் அடியோடினி யாதும் ஆற்றாது,

நாவின் நஞ்சம் உடைய நங்கைதன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் உயிரை
ஏவி னையோ அவனும் ஏகி னனே

என ஏக்கமுற்றுப் பின்னும் அவளைப்பலவாறுவெறுத் துரைத்துப் பழிக்கப் புகுவானாகி,

கண்டே னெஞ்சங் கனிவாய்க்
கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனா னீயென்
உயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப்
பாவீ தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர்
கூற்றந் தேடிக் கொண்டேன்

[உன்னைக் காணுந்தோறும் என் நெஞ்சம் கனிந்து, உன் கொவ்வைக்கனிபோன்ற வாயின் விடத்தை நான் அனேக காலம் அமுதமென்று அருந்தி மகிழ்ந்தேன். அதனால் என்னுயிரை நீ இப்பொழுது அடியோடு உன் வாயில்போட்டுக் கொண்டுவிட்டாய். பாவி, உன்னை நான் முன் அக்னி சாக்ஷியாக மனைவியாகக் கொண்டேனல்லேன், அதற்குப் பதிலாக ஒரு எமனையே தேடிக்கொண்டேன்]

விழிக்குங் கண்வே றில்லா
வெங்கா னெள்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச்
சூழ்வா யென்னைப் போழ்வாய்
பழிக்குந் நாணாய் மாணாப்
பாவி யினியென் பலவுன்
கழுத்தின் நாணுன் மகற்குக்
காப்பின் னாணா மென்றான்

[அவனன்றிப் பார்க்குங்கண் வேறு இல்லாத என் பிள்ளையை, உன்னுடைய சூழ்வினையால் கொடிய காட்டிற்கு ஏகும்படி சூழ்ந்தவளே, என்னைப் பிளக்கின்றாய். பழிக்கு நீ நாணவில்லை மாண்பில்லாப் பாவியே இன்னும்பல இயம்புவானேன். உன் கழுத்தில் கட்டிய தாலிக்கயிற்றையே அறுத்து உன் மகன் பரதனுக்குக் காப்புக் கயிறாகக் கட்டப் போகின்றாய் என்றான்]

இன்னே பலவும் பகர்வா
னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென்
தார மல்லள் துறந்தேன்
மன்னே யாவான் வருமப்
பரதன் தனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு
மாகா னுரிமைக் கென்றான்

[இப்படிப் பல சொல்லியும் மனமிரங்காம லிருக்கின்ற கைகேசியை நோக்கி, இப்பொழுதே சொல்லுகின்றேன், இவளைத் துறந்துவிட்டேன். இவள் இனி என் மனைவி அல்லள், அரசனாவதற்கு வரும் அப்பரதனையும் நான் மகனென்று கருதமாட்டேன். முனிவனே, எனக்கு உத்தர கிரியை செய்கின்ற உரிமையும் அவனுக்கில்லை, என்றான்]

விடயந் தெரிந்தவனும் ஐந்தவித்தவனும் ஆகிய வசிட்டமுனிவனே தன்னை மறந்து கைகேசியை அத்துணைக் கழறினனென்றால் பேதைத் தயரதன் இயம்பிய இவை கொடியனவேனும்மி கையோ ஆகா.

தன்னருமைத் தனிமைந்தன் திருமுகத்தைக் கடைமுறைதான் காணவண்ணங் கடிந்தகற்றிய கைகேசியின் அலகிலாக் கொடுமை தன் கருத்தைப் பின்னும் பலபடி பிளக்கத் தயரதன் உயர் கோசலையின் தளர்ந்திளைந்த முகம்நோக்கி,

என்னைக் கண்டு மேகா
வண்ணம் மடையூ றுடையான்
உன்னைக் கண்டும் மிலனே

என்ன இரக்கமுடன் வினவியதைக் கேட்டிருந்த கற்றாணுங் கரைந்துருகு மென்பதில் ஐயமில்லை. மற்றுப் பஞ்சிமென் தளிரடிப் பூங்கொம்பனைய மெல்லியற் கைகேயி இரக்கமென்பது கண்டறியாக்கராவெனநின்றனள். அரக்கர் பாவமும் அந்தணர் புரிந்த அருந்தவங்களும் வயிரஞ்செறிந்த கற்றூணின் ஆயிரம் மடங்கதிகமாகித் திணிந்திருந்தன வென்றால் கேகயன் மாமகள் தன்னிலை திரிந்து கலங்குவ தெங்ஙனம்! இதனாற்றான் கணியன் பூங்குன்றன், பெரியோரை வியத்தலிலதோடு, "சிறியோரை இகழ்த லதனினு மிலமே" என்று சாற்றினன்.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனாம்! இனாம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

பாலிஸிஹோல்டர் நலமே எங்கள் நோக்கம்.
பிரீமியம் மிகக்குறைவு. ஒருவிதக் குற்றமும் சொல்லமுடியாத செக்கியூரிட்டிகள். கடுமையான சிக்கனம்.
இந்தியரின் திறமுடைய மேற்பார்வை.
பாலிஸிஹோல்டர் பணம் திரும்பப்பெறும் காலம் எளிதில் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் வசதி.
இந்தியாமுழுதும் கிளை ஆபீஸ்கள்
பொதுஜன ஆதரவும், முன்னேற்றமும் உடையது.
பணத்திற்கு அழிவு ஒன்றும் நேராதபடி லாபமான வழியில் இன்வெஸ்டுமெண்டுகள் செய்யப்படுவது.
எனவே
நாஷனல் இன்ஷியூரென்ஸ் முன்நிற்கின்றது.
பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை:—
கஞ்சம், விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி. அனந்தபூர், கிழக்கு ஹைதராபாத் ஜில்லாக்கள் கோயமுத்தூர், நீலகிரி. விவரங்களுக்கு எழுதவும்.

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. — T. அனந்தாசாரி, B. A. பிராஞ்ச் செக்ரடரி.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4. சுயாலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், முயலுக்கு முயல வேண்டா, நல்லோர்கடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கக் காக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாராகார், நாணத்தால் வைராக்கியம், மால்வாலியோவின்மரபு மாய்க்கதில்லையோ, யானைமிழ்த்தபின், மண்ணாற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைநிழ்கணக்கு,பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சண்டேவி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தலையங்கங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் — அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், பானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்)மொழிபெயர்ப்புக்கட்டுரைகள்,மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தோல்பயிண்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.
கலாநிலயம்,வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

SADVAIDYASALA NANJANGUD
SOLE AGENTS THE UNITED CONCERN, MADRAS

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

மதுரை காஞ்சீபுரம்.

கலாநிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பால காண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றுமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0**, வெளிநாடு ரூ. **11—8—0**.
(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

கலாநிலயம், புரசைபாக்கம், சென்னை.

வர்த்தமானம்

திருநாவுக்கரசு நாயனார் திருவவதாரம்:—மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B. A. "நாயனார் திருவவதாரம்" என்ற விஷயமாய் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்:—

"சேக்கிழார்சுவாமிகளே திருநாவுக்கரசின் சரிதையையும் அவர் பெருமையையும் எப்படித் தம்மால் வரைய இயலும் என்று கூறுங்கால், என்னால் இப்பெரியார் சரிதையைப்பற்றிப் பேசுதல் எளியதாகுமோ. எனினும் அடியேன், அப்பர் சுவாமிகள்மீது வைத்த பேரன்பினால், அவரது அவதாரச் சிறப்பை மாத்திரம் எடுத்தாளத்துணிந்தேன். அங்ஙனம் செய்வதும் ஓர் திருத்தொண்டாகவே முடியுமென்றும் நினைக்கின்றேன். திருத்தொண்டு புரிவதில் அப்பர் சுவாமிகள் சிறிதும் பின்னின்றாரல்லர். அவரியற்றிய உழைவாரத்தொண்டு எத்தகைய மாண்புடையதென்பதை யாவருமறிவர்.

இதுநிற்க "வாய்மைதிகழ் சீர்பரவல்" என்றார் அருண்மொழித் தேவரும். "வாய்மை" என்ற பதத்திற்கு "மெய்" என்ற பொருளுண்டு. "மெய்" என்று நமது தேகத்தையும் அழைக்கின்றோம். "வாய்மை" என்பதை வாயின்தன்மை என்றெடுத்தால், வாயின் தன்மை எப்பொழுதும் பேசுந்தொழிலாயிருக்கின்றது. ஆயின் "வாக்கு" என்னும் பொருள் பெறப்படும் பின் "வாய்மை" என்பதற்கு "உண்மை" என்ற பொருளுமுண்டு. உண்மை என்ற பதத்தை உள்ளத்தின்தன்மை யென்றெடுத்தால், ஒருவனுக்கிருக்கும் அறிவின் மூலமாய் அவனுடைய உள்ளம் சிந்திக்கிறது. ஆகையின் மனம், வாக்கு, காயம் மூன்றினுலும் பிழையான கிரியைகளை நீக்கிச் சரியானவற்றை இயற்றிய நெறி விளங்கும் சிறப்பினைப் பரவல் செய்கின்றேன் என்னும் பொருளை உள்ளிட்டு, 'வாய்மை திகழ் சீர்பரவல் உறுகின்றேன்' என்றாரென்க!

இவ் வுண்மைநெறியே ஒருநாட்டிற்கு அவசியம் வேண்டப்படுவதாகும். ஓர் நாடு உய்வதற்கு ஆங்கு வாய்மை திகழவேண்டும். இந்நெறியைத்தானிக்காலத்தில் 'சத்தியாக்கிரகம்' என்பர். சத்தியாக்கிரகமென்றால் உண்மையைப் பற்றுதலென்னும் பொருளுடையதாகும். சத்தியாக்கிரகத்தைத் தென்னிந்தியாவில் நாட்டியவர் திருநாவுக்கரசு சுவாமிகளாவர். இவர் சரியான நெறியாகிய சரியைமார்க்கத்திற் றொடங்கி ஞான நிலையை அடைந்தவராவர். முதற் கைக்கொண்டிருந்த மார்க்கமாகிய சமணர்மதம் பொய்யெனக் கண்டு, அதை நீத்துப் பின் உண்மைநெறியாகிய சைவத்தின்வழி ஒழுகியவர். அங்ஙனம் ஒழுகி வருகையில் அவருக்கு மாற்றாரால் பல இடையூறுகள் நேர்ந்தன. அக்காலங்களில் தாம் பிடித்திருந்த உண்மைநெறிப் புணைவழியாய்த் தமக்கு நேர்ந்த இடையூறுகளெல்லாவற்றினுமிருந்து நீங்கி, மாற்றாரையும் மேற்கொண்டனர். கல்லோடு கட்டப்பட்டுக் கடலுட் பாய்ச்சிய காலத்திற் கல்லோடு மிதந்தனர். கொல்லவந்த பட்டத்து யானை அவரை வணங்கி வலம் வந்து சென்றது. சுண்ணாம்பறையி லடைபட்டிருந்த காலத்தில் அவ்விட மவருக்கு, 'மாசில்வீணையும், மாலைமதியமும், வீசுதென்றலும், வீங்கிளவேனிலும், மூசு வண்டறைப் பொய்கையும்' போன்றிருந்தது. பாராளு மன்றத்துத் தூதுவர் வந்து பிடித்து அரசனது கட்டளையை யறிவிக்க 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்' என்று அஞ்சா நெஞ்சராய் நின்று பகர்ந்தனர். இதைத்தான் உண்மைநெறி அல்லது சத்தியக்கிரகம் என்றழைப்பது. கடவுளின் திருவருட்டிறத்தை அடைந்தவர் ஓர் கிரியையைப் புரியுங்கால், அவருடைய மனம் கடவுள்பாற் சென்றிருக்கும். உதாரணமாகத் தீயில் நடப்பவரைப் பார்த்திருக்கின்றோம். அங்ஙனம் நடப்பவர், நடக்குங்காலத்தில் தாம் தீயில் நடக்கின்றனர் என்ற சிந்தனையிலிருப்பாராயின் கட்டாயமாய் அக்கினி அவருடைய கால்களைப் பற்றிவிடும். அவஸ்தாப்பிரயோகம் (Mesmerism) என்றோர் மயக்கம்செய்விக்கும் வித்தையுண்டு. கடவுளின் தியானத்திற் சிந்தையானது மயங்கியிருக்கையிலும் மனமானது அவஸ்தாப்பிரயோகம் (Mesmerism) பண்ணப்பட்டிருப்பதாகவே சொல்லவேண்டியது. அப்போது வேறு எவ்வகை உணர்ச்சியும் அற்றவராகவே விளங்குவார். இதுதான் அப்பர்சுவாமிகளுடைய நிலையென்க.

இப்பொழுது எமது நாயனார் திருவவதாரம் செய்த நாட்டின் சிறப்பினை ஆராய்வாம். நாட்டின் பெயர் திருமுனைப்பாடி நாடாகும். இந்நாளி லிந்நாடு (South Arcot District) என்று அழைக்கப்படுகிறது. ஓர் கிராமம் ஓர் நகரம் அல்லது ஓர் நாடு காலத்துக்குக் காலம் மாற்றமடைவது இயல்பே. இவ்வகை மாற்றத்தை நாம் பிரத்திபட்சமாய் அநுராசபுரமென்னும் நகரத்திற் றற்போது பார்க்கலாம். மேற்கூறிய திருமுனைப்பாடிநாடும் இவ்விதமாகவே மாற்றங்களை அடைந்திருக்கவேண்டும். இத் திருமுனைப்பாடிநாடு, "தொன்மை முறைவரு மண்ணின் துகளன்றித் துகளல்லாது" விளங்கிய ஓர் நாடாகும். அதாவது இந்நாட்டில் பழமைபொருந்திய முறைகளிற் சிறந்த பூமியின் தூசிகளல்லாது வேறொரு குற்றமும் பொருந்தியதா யிருக்கவில்லை. இங்கேயுள்ள மக்களின் தன்மை எத்தகையதென்னின், "நன்மைநெறி ஒழுக்கத்தின் நலஞ்சிறந்தகுடி" யினைச் சேர்ந்தவராவர். இனி இத்திருமுனைப்பாடிநாடு 'சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்" நிறைந்து, அதாவது சந்திரமண்டலத்தோடு பொருந்திய அதிகம் உயர்ந்த அழகிய மாடங்களையுடைய பட்டினங்களைத் தன்னகத்தே வைத்திருந்ததாகும். ஆகையின் இயற்கைவளங்கள் நிறைந்து யாதொரு குற்றமும் பொருந்தப்பெறாத பூமியாயும், நலஞ்சிறந்த குடிகளைத் தன்னகத்தே உள்ளதாயும், வானுறவோங்கி வளரும் கட்டிடங்கள் பொலிந்து விளங்கியதாயும் இருந்தது திருமுனைப்பாடி நாடென்க. பெரியோர் பிறந்து வளருவதற்கு ஏற்ற நாடாயிற்று காட்டிலே வளரும் பிள்ளை மிருகத்தன்மையை அடையும். நாட்டிலே வளரும் பிள்ளை மனுஷத் தன்மையை அடையும். ஒரு பிள்ளையின் அண்மையிலுள்ள பொருள்கள் யாவும், அப்பிள்ளையின் வளர்ச்சியைப்பற்றிப் பிடித்துச் சீவியத்தை நன்றேனுந் தீதேனும்ஆக்கவல்லனவாகும்.

கவிகள் நம் நாட்டைக் "கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக் கைம்முகங்காட்ட, மருங்குவளர்கதிர்ச் செந்நெல் வயப்புரவி முகங்காட்டப், பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க, நெருங்கியசாதுரங்கபல நிகர்ப்பனவா நிகர்மருதம்," என்று வர்ணிப்பர்.

இத்தகைய ஓர் இன்பம் தரக்கூடிய செய்யுள் வேறெந்த மொழியிலும்இருக்குமென்றுயான்எண்ணவில்லை. ஆங்கிலமொழியில் அறவே இல்லை யென்றே சொல்லவேண்டியது எம்மனோர் ஆங்கிலச் செய்யுட்களாயின் உவந்தேற்று வாசிப்பர். ஆனால், இவ்விதத் தமிழ்க் கவிகள் இருப்பன வென்பதையும் அறியாதவரும் பலருளர். இதுநிற்க, ஓர் புலவர் ஓர் நாட்டின் விளைநிலத்தை, முற்கூறியவிதச் செய்யுள் மூலமாய் வியப்புற வர்ணிக்க, அந்நிலம் எத்தகைப் பெரிய பயனைக் கொடுத்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒரு பாய்புநிலம் ஏறக்குறைய 50-பறை நெல்லுவரை விளைத்திருக்குமென்று யூகித்தல்கூடும். இவ்விதப் பெரும் பயனை அளித்த ஓர் நாடு, அப்பர் [illegible] ஓர் பெரியாரை அவதரிக்கச் செய்தது ஓர் அற்புதமன்று.

188920

REG. NO. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

இரண்டு ஸம்ஸ்க்ருத

மஹாகாவியங்களின்

தமிழ் மொழி பெயர்ப்பு.

ஆயுர்வேத பூஷண பண்டித

எம். துரைசாமி ஐயங்கார் அவர்களால்

மொழி பெயர்க்கப் பட்டவை.

காதம்பரீ

சீர்திருத்திய பதிப்பு

1400 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத காதம்பரீயின் மொழி பெயர்ப்பு கதை வெகு அற்புதமானது பண்டைக்காலத்திய இந்திய நாகரீகத்தை விளக்கும் வர்ணனைகள். வாக்கிய நடை தமிழில் இனிதாகவும் எளிதாகவும் அமையப்பெற்றது. "காதம் பரீயைப் படிக்கையில் இரவிகர் உணவும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. அநேக படித்த வித்வான்களும் ஸ்த்ரீகளும் இக்காதம்பரீயைப் புகழ்ந்து வருகிறார்கள். விலை ரூ. 1—8—0

மேக ஸந்தேசம்.

ஸ்ரீ காளிதாஸ மஹாகவி இயற்றிய ஸம்ஸ்கிருத காவ்யத்தின் அழகிய தமிழ் மொழி பெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாப வசத்தால் மனைவியை விட்டுப் பிரிந்த ஒரு யக்ஷன் தன் மனைவிக்குத் தூது அனுப்பும் விஷயம் வெகு மனோஹரமாய் அமைந்துள்ளது. தமிழ் நடை வெகு இனிது. ஒவ்வொரு பக்கத்தில் அரும்பத உரையும் உபகதைகள் முதலியதைப் பற்றிய அநுபந்தம், முகவுரை முதலியன வெகு உபயோகமாயிருக்கும்.

தற்கால விலை ரூ. 0—14—0

இரண்டு நூல்களும் ஒரே தடவையில் விலை ரூ 2.

தபால் சார்ஜு முதலியது வேறு.

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
85. வேள்ளாளத்தெரு, வேப்பேரி, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதர் கதை. விலை ரூ. 1.0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)